www.tamilarangam.net

அக்டோபர்
1995
October

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

இதழ்
57
Issue



அகிலத்தை
ஆட்டுவிக்கும்
ஐங்கரத்தான் மகிமை



மணிவிழாவின் 'மணி'யான நிகழ்ச்சி...
மாணவனை ஆசீர்வதிக்கும் குருநாதர்



ஆத்மஜோதி அவர்களின்
இறுதிப் பவனி



மொன்றியல் முருகன் ஆலய
திருப்பணியில் தொண்டர்கள்

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

A Monthly Information Digest

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆசிரியரிடமிருந்து . . . . . . . . . . . . . FROM THE EDITOR

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**Established**
February 1991

P.O. Box -3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

Phone: (416) 920-9250
Fax: (416) 757-7399

**Produced by**
Eelam Thamil
Information Centre
(ETHIC) of Toronto
&
Catholic Immigration
Bureau,
Scarborough Region

**Published by**
Thamil Information
Research Unit (THIRU)
&
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editors**
Sasi Pathmanathan
V. Vivekananthan

**General Manager**
S.T. Singam

**Production Asst.**
N. Kumaradasan

**Circulation Assts.**
P. Balakumar
P. Sivasubramaniam

**Typesetting**
**Layout & Design**
Ahilan Associates

**Technical Support**
Haran Graph &
V. L. Ananth

**Printers**
Ahilan Associates
(416) 920-9250

**PUBLISHED**
**MONTHLY**
4000 Copies

ஆஸ்பத்திரிகள் அகற்றப்படுகின்றன; அவசர சிகிச்சைப் பிரிவுகள் நீக்கப்படுகின்றன; பொதுநலப்படி கால்வாசியால் குறைப்பு; அகதிகளுக்குச் சேவை புரியும் நல்வரவு இல்லங்களுக்கு மூடுவிழா; லீகல் எய்ட் கைவிரிப்பு; பாடசாலைச் சேவைகள் பல குறைப்பு; போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வு; அரச சேவையின் ஆயிரக் கணக்கான ஊழியர்கள் வேலைநீக்கம்.

இவைகளெல்லாம் சமகாலத்தில் நடைபெற்றால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பார்க்க முடியுமா? ஒரு தடவை கண்களை இறுக்கி மூடுங்கள்; நீங்கள் வசிக்கும் இந்த மாகாணத்தை நினைத்துப் பாருங்கள்; கடந்த சில நாட்களாக நீங்கள் கேள்விப்படும் செய்திகளைத் தொடர்ச்சியாக நினைவுக்குக் கொண்டு வாருங்கள்; அனைத்தும் இங்கே இப்பொழுது எம்முன்னால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

'நிதிப் பற்றாக்குறை; செலவினக் கட்டுப்பாடு' என்கின்ற பெயரில் இந்த மாற்றங்களை ஒன்ராறியோவின் ஆட்சிப்பொறுப்பை மூன்று மாதங்களுக்கு முன்னர் ஏற்றுக்கொண்ட மைக் ஹரிஸ் தலைமையிலான கன்ஷர்வேடிவ் கட்சியினர் மேற்கொண்டுள்ளனர்.

தேர்தல் வாக்குறுதிகளையே தாங்கள் நிறைவேற்றுவதாகவும், இவைகளைச் செய்வதற்காகவே மக்கள் தங்களைத் தெரிவு செய்ததாகவும் அரசாங்க தரப்பில் விளக்கம் கொடுக்கப்பட்டு வருகின்றது.

பத்தாண்டுகளாக வேலையின்மை, பணவீக்கம், வரி உயர்வு போன்றவைகளால் பலவித கஷ்டங்களையும் எதிர்கொண்ட மக்கள், ஒரு மாற்றத்தை விரும்பியிருந்தனர். அதனால், ஐந்தைந்தாண்டுகள் ஆட்சி நடத்திய லிபரல், புதிய ஜனநாயகக் கட்சி ஆகியவைகளிடமிருந்து சற்று விடுதலையை எதிர்பார்த்தே கன்ஷர்வேடிவ்வை ஆட்சிக்குக் கொண்டு வந்திருந்தனர். மக்கள் வழங்கிய வெற்றிக்கான அர்த்தம் 'நாங்கள் விரும்பியவைகளைச் செய்யலாம்' என்பதாக இருக்க முடியாது. அவ்வாறு அரசாங்கம் கருதவும் கூடாது.

வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி என்னாச்சு? 13,000 அரச ஊழியர்களை வீட்டுக்கு அனுப்புவதால் பொதுஜனங்களில் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கவுள்ளது?

வைத்திய வசதிகளில் ஒருபோதும் கைவைக்க மாட்டோம் என்று மேடைகள் தோறும் அடித்துக் கூறிய சத்தியங்கள் காற்றோடு கலந்து விட்டனவா? ஆஸ்பத்திரிகளுக்கு மூடுவிழாவும், அவசர சிகிச்சை நிலையங்களின் குறைப்பும் வைத்திய வசதி அதிகரிப்புகளா?

வருமான வரிக் குறைப்பு எங்கே நிற்கின்றது? 'வெட்டுகளையும், விலை அதிகரிப்புகளையும் உடனடியாகச் செய்யலாம்' என்றால் வருமான வரிக் குறைப்புக்கு மட்டும் எதற்காக ஓராண்டுக் காலதாமதம்?

பதவிக்கு வந்தவுடன் பொதுநலப்படியைக் கால்வாசியால் குறைப்பதாகத் தேர்தல் காலத்தில் கூறவில்லையே! வீட்டு வாடகையைச் செலுத்திய பின்னர் மிகுதியாகக் கிடைக்கும் பணத்தில், நாளொன்றுக்கு ஆறரை டாலர்களில் வாழ்க்கையை நடத்த முடியுமா? அப்படியானால் அது மாயாஜால வித்தையாகத்தான் இருக்க முடியும்.

ஆயிரக்கணக்கான குழந்தைகள் பசியாலும் பட்டினியாலும் வாடவேண்டிய பரிதாப நிலை, கனடாவின் முன்னணி நகரான ரொறன்ரோவில் நிகழவிருக்கின்றது. இதனைப்பற்றி ஆட்சியாளர்கள் எவருமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை. அதுதான் பரவாயில்லை. அவர்கள் சும்மாவாவது இருக்கக்கூடாதா? வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல இருக்கின்றதே அவர்களது கூற்றுக்கள்.

தங்கள் பிள்ளைகளுக்கு உணவு வழங்க முடியாத பெற்றோர், அவர்களைக் குழந்தைகள் உதவி நிலையத்திடம் கையளிக்கலாம் என்று கூறியுள்ளார் பொதுநலப்படி வழங்குதலுக்குப் பொறுப்பான சமூக சேவைகள் அமைச்சர். என்ன கல்நெஞ்சோ?

"பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதற்கு பொதுநலப்படி வழங்கப்படு வதில்லை. வேலை ஒன்றினைத் தேடுவதற் காகவே பொதுநலப்படி வழங்கப்படுகின்றது" என்று அடித்தாற்போன்று சொல்லியுள்ளார் முதலமைச்சரான மைக் ஹரிஸ் அவர்கள்.

"வீட்டை விட்டு வெளியேறி வீதியில் இறங்குங்கள்; தற்காலிகமாகவாவது ஒரு வேலையைப் பெற்று 'வெட்டினை'ச் சரிசெய்யுங்கள்" என்று ஆலோசனை வழங்குகின்றன ஆட்சிபீடக் குரல்கள். "நாங்கள் வேலைக்குச் செல்லத் தயார். ஆனால் வேலை எங்கே இருக்கிறது" என்று கேட்கின்றார்கள் பாதிக்கப்பட்ட பொதுமக்கள். அதற்குப் பதிலில்லை. ஆனால் 'வேலை தேடுங்கள்' என்று மட்டும் மீண்டும் மீண்டும் ஆலோசனை.

குடியுரிமை அமைச்சின் கீழ் இயங்கும் 'இனத்துவேஷ ஒழிப்புச் செயலகம்' (Anti Racism Secretariat) இந்த வாரத்துடன் ஒழிக்கப்படுதாகவும் ஒரு தகவல். அதற்கு முன்னோடியாக மேற்படி அமைச்சின் கீழ் இயங்கி வந்த பல்கலாசார, முதியோர், வலது குறைந்தோர் விவகாரங்களுக்கான ஆலோசனைச் சபைகளும் நீக்கப்பட்டு விட்டன.

அரசாங்கம் எந்தப் பக்கம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருக்கின்றது என்பது புரிகிறதா?

**எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

**ஸ்தாபிதம்**
பெப்ரவரி 1991

**முகவரி**
P.O. Box - 3
Station 'F'
Toronto, On. M4Y 2L4

**போன் : (416) 920-9250**
**பக்ஸ் :(416) 757-7399**

**தயாரிப்பு**
ஈழத்தமிழர் தகவல்
நிலையம் - ரொறன்ரோ
&
கத்தோலிக்க
குடிவரவு நிலையம்
ஸ்காபரோ

**வெளியீடு**
தமிழர் தகவல்
ஆய்வுப் பிரிவு
&
அகிலன் அசோஷியேற்ஸ்

**பிரதம ஆசிரியர்**
எஸ் . (திரு) திருச்செல்வம்

**இணை ஆசிரியர்**
ரஞ்சி திரு

**உதவி ஆசிரியர்கள்**
சசி பத்மநாதன்
வே. விவேகானந்தன்

**பொது முகாமையாளர்**
எஸ். ரி. சிங்கம்

**தயாரிப்பு உதவியாளர்**
என். குமாரதாஸன்

**விநியோக உதவியாளர்கள்**
ப. பாலகுமார்
ப. சிவசுப்பிரமணியம்

**ஒளி அச்சு**
**வடிவமைப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்

**தொழில்நுட்ப உதவி**
ஹரன் கிறாப் &
வி. எல். ஆனந்த்

**அச்சுப்பதிப்பு**
அகிலன் அசோஷியேற்ஸ்
(416) 920-9250

**மாதாந்த வெளியீடு**
4000 பிரதிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# லான்டிங் கட்டணமான 975 டாலர்களை லான்டிங் வழங்கும்போது அறவிடுவதற்கு குடிவரவு அமைச்சர் ஆலோசனை

## $975 landing fee could be deferred until applications are finalized

அகதிகளும், குடிவரவாளர்களும் கனடாவில் நிரந்தரக் குடியுரிமை பெறுவதற்கு (லான்டிங்) செலுத்த வேண்டிய 975 டாலர் கட்டணத்தை, விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டுமென்ற நிபந்தனையைச் சற்றுத் தளர்த்துவதற்குத் தாம் ஆலோசித்துள்ளதாக குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சர் சேர்ஜியோ மார்கி அறிவித்துள்ளார்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் நடைமுறைக்கு வந்த புதிய சட்டத்தின் கீழ், கனடாவில் அகதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டவர் உட்பட ஒவ்வொரு 18 வயதுக்கு மேற்பட்ட குடிவரவாளரும் தமது நிரந்தரக் குடியுரிமை விண்ணப்பத்துக்கு 975 டாலர்கள் செலுத்த வேண்டும். இது அவர்களது விண்ணப்பப் பரிசீலனைக் கட்டணமான 500 டாலர்களுக்கு மேலதிகமாகும். இதன் பிரகாரம் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் மொத்தமாக 1475 டாலர்களை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்பினாலன்றி அவை பரசீலனைக்கு உட்படுத்தப்படமாட்டா என்பது கண்டிப்பாக அமல் செய்யப்பட்டது.

வருமானமற்றவர்களும், பொதுநலப்படியில் தங்கியிருப்பவர்களும் அரசாங்கத்திடம் கடன்பெற்று இந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும், அகதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒருவர் அந்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் கடனையும் பெற்று தமது லான்டிங் விண்ணப்பத்தைச் செலுத்த முடியாதிருந்துள்ளது. இதனால் பலரது விண்ணப்பங்களும் மேலும் 90 நாள் அவகாசம் கொடுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டு வந்தன

இந்த நிலையில், அகதியாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒருவர் அந்த நாளிலிருந்து 180 நாட்களுக்குள் (ஆறு மாதங்கள்) லான்டிங் விண்ணப்பத்தை அனுப்புவதைச் சட்டபூர்வமாக்க அரசாங்கம் இணக்கம் கண்டது. இந்த மாதம் (அக்டோபர்) முதலாம் திகதியிலிருந்து இந்தக் கால நீடிப்பு நடைமுறைக்கு வரும் எனவும் சில வாரங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த பெப்ரவரி மாதத்துக்குப் பின்னரான சகல லான்டிங் விண்ணப்பங்களும் அல்பேர்ட்டாவிலுள்ள வெகர்வில் என்ற நகரத்தில் அமைந்திருக்கும் மத்திய நிலையத்திலேயே பரிசீலனைக்குட்படுத்தப்படுகின்றன.

லான்டிங்கிற்கு விண்ணப்பம் செய்யும் ஒருவருக்கு அதனை வழங்க ஏறத்தாழ 12 மாதங்களிலிருந்து 18 மாதங்கள் வரை செல்கின்றது. வைத்திய பரிசோதனை, பாதுகாப்பு அறிக்கை, ஆளடையாளம் ஆகிய மூன்றும் நிரூபிக்கப்பட்ட பின்னரே லான்டிங் வழங்குவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது. இந்தநிலையில், விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போதே லான்டிங் கட்டணமான 975 டாலர்களையும் சேர்த்து அனுப்புவதைத் தவிர்த்து, லான்டிங் பத்திரம் வழங்கும்போது அதனை அறவிடுவதே நியாயமானது என்று பலரும் கருத்து வெளியிட்டு வந்தனர். அரசாங்க தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் சிலர் இதனை வலியுறுத்தி வந்தனர்.

'தலைவரி' என்று கூறப்படும் 975 டாலர்கள் கட்டணம் அறவிடுதல் நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்ட யோசனைகளில் ஒன்றாதலால் இதில் எந்த மாற்றத்தினையும் செய்வதற்குத் தமக்கு அதிகாரம் இல்லை என்று இதுவரை சொல்லிவந்த குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சர், தற்போது இந்தக் கட்டணத்தை லான்டிங் வழங்கும் வேளையில் செலுத்தக் கூடியதாக மாற்றுவதற்குத் தாம் ஆலோசித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

குடிவரவு அமைச்சரின் வேண்டுகோளின்பேரில் இந்தக் கட்டணத்தை பின்தள்ளிப் பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றித் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு தமது நாடாளுமன்றச் செயலாளர்களிடம் நிதி அமைச்சர் போல் மார்ட்டின் பணித்துள்ளார் அரசாங்கத்தின் வருவாயையும், வரவு செலவுத் திட்ட யோசனைகளையும் பாதிக்காதவாறு இவை அமையவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

எவ்வாறாயினும் 975 டாலர்கள் அறவிடுவதில் எந்த மாற்றமும் இருக்காது. தற்போதுள்ளது போல 500 டாலர்களுடன் சேர்த்து 975 டாலர்களையும் செலுத்துமாறு கேட்கப்படாது, விண்ணப்பத்துடன் பரிசீலனைக் கட்டணமான 500 டாலர்களையும், லான்டிங் வழங்கப்படும் வேளையில் அதற்குரிய 975 டாலர்களையும் வழங்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்படலாமென்றும் அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கனடாவுக்கு அகதியாக வந்து ஏற்றுக்கொள்ளப்பட்டு லான்டிங்கிற்கு விண்ணப்பிப்பவர்கள் விடயத்தில் இந்த நடைமுறை மாற்றம் வந்தாலும், ஸ்பொன்ஸர் செய்யப்படுபவர்கள், வெளிநாட்டு விசா நிலையங்களில் விண்ணப்பம் செய்பவர்கள் விடயத்தில் இதனை மாற்றம் செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படலாமென்று அதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

உதாரணமாக, இங்கிருக்கும் ஒருவர் இலங்கையிலிருக்கும் தமது பெற்றோரை ஸ்பொன்ஸர் செய்யும் வேளையில் அதற்குரிய கட்டணமாக ஆளுக்கு 1475 டாலர்களைச் செலுத்தினால் மட்டுமே அந்த விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு கொழும்பிலுள்ள கனடியத் தூதரகத்துக்கு அனுப்பப்படுகின்றது. அதன்பின்னர், கொழும்பில் நேர்முகப் பரீட்சை, வைத்திய பரிசோதனை ஆகியவைகளை அவர்கள் முடித்த பின்னர் கனடா வருவதற்கு விசா என்னும் பெயரில் லான்டிங் பத்திரம் வழங்கப்படுகின்றது.

இதனை இரண்டாகப் பிரித்து இங்கு 500 டாலர்களையும், கொழும்பில் தெரிவு செய்யப்பட்டு விசா வழங்கும்போது மிகுதியான 975 டாலர்களையும் பெறுவது சிரமமானது என்றும், இதனால் பல தாமதங்கள் ஏற்படும் என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனினும், இவ்விடயத்திலும் உள்நாட்டுக் கொள்கையில் கொண்டுவரப்படும் மாற்றமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று சில எம் பிக்கள் நெருக்கி வருகின்றனர்.

குடிவரவு அமைச்சர் சேர்ஜியோ மார்கியின் நாடாளுமன்றச் செயலாளர்களில் ஒருவரான மேரி கிளான்ஸி அவர்கள் கடந்த மாதம் சீனாவில் நடைபெற்ற சர்வதேச மாதர் மாநாட்டில் பங்குபற்றிய பின்னர் நாடு திரும்பும் வழியில் பல்வேறு கனடிய விசா நிலையங்களுக்கும் விஜயம் செய்திருந்தார் 'லான்டிங்கிற்கு விண்ணப்பம் செய்யும்போதே 975 டாலர்களையும் செலுத்துவதிலுள்ள கஷ்டத்தை விண்ணப்பதாரிகள் முறையிடுவதே பிரதானமாக இருப்பதை நேரில் கண்டுள்ளேன்" என்று தமது அமைச்சருக்கு அவர் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், உள்நாட்டில் கடந்த பெப்ரவரி மாதத்துக்குப் பின்னர் லான்டட்டுக்கு விண்ணப்பித்த சுமார் 50,000 பேரில், ஏறத்தாழ நான்கு வீதமானவர்களே அரசாங்கத்திடம் கடன் கேட்டு விண்ணப்பித்துள்ளதாகவும் மேரி கிளான்ஸி தெரிவித்துள்ளார்.

லான்டிங் கட்டணத்தைச் செலுத்தக் கால-தாமதம் வழங்கப்படுவதானது அதனை நீக்குவதாகவோ, அல்லது குறைப்பதாகவோ கருத முடியாதது என்றும், லான்டிங் வழங்கப்படும் காலத்துக்கு முன்னர் விண்ணப்பதாரிகள் ஏதாவது ஒரு தொழிலினைப் பெற்று தமக்குத் தேவையான பணத்தினைச் சேகரிப்பதற்கு வழங்கப்படும் ஒரு சந்தர்ப்பமாகவே இதனைக் கருதவேண்டும் என்றும் நிதி அமைச்சு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

975 டாலர்கள் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் அரசாங்கம் இந்த வருடம் பெறவிருக்கும் 140 மில்லியன் டாலர்களைப் பாதிக்காத வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது இங்கு முக்கியமானதாகும்.

**எஸ்தி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கயிறிழுப்பு நிலைக்குள் 'லீகல் எய்ட்' திட்டம்; சில வழக்கறிஞரின் 'கணக்கு'கள் மீது விசாரணை!

## Legal aid in Crisis - What next?

லீகல் எய்ட் நிறுவனம் நிதித் தட்டுப்பாட்டினால் என்ன செய்வதென்று தெரியாது தவிக்கும் நிலை பற்றியும், அதனால் பல கடும்போக்குகளை எடுக்கக்கூடிய நிலைவரத்துக்குத் தள்ளப்பட்டுள்ளமை பற்றியும் கடந்த நான்கு இதழ்களில் குறிப்பிட்டிருந்தோம்.

கடந்த பல மாதங்களாக வழக்கறிஞர்களுக்குச் செலுத்த வேண்டிய பணத்தினை லீகல் எய்ட் நிறுவனம் செலுத்தாததனால் பல வழிக்கறிஞர்கள் தங்களது அலுவலகங்களை மூடவேண்டியுள்ளதைப் பத்திரிகைகளில் படங்களுடன் செய்தியாகப் பார்க்க நேருகின்றது.

சில வழக்கறிஞர்கள் மிகக்கூடுதலான நேரக் கணக்கினைச் சமர்ப்பித்து தங்களுக்கான கட்டணத்தைக் கூட்டி மனுக்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும், இந்த மோசடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. நாளொன்றுக்கு 24 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட நேரத்துக்கு வேலை செய்ததாக சிலரது கோரிக்கைகள் காட்டிக்கொடுத்துள்ளன. இவர்கள் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சுமார் 50 வழக்கறிஞர்களே மிகப் பெரும் தொகையான கணக்கினைச் சமர்ப்பித்து வருவதாகவும், அவர்களிடையில் மட்டுமே ஊழல், துஷ்பிரயோகம் இடம்பெற்றிருக்கலாம் என்றும், இது மொத்த வழக்கறிஞர்கள் தொகையில் ஐந்து வீதமாகவே இருக்கும் என்றும் இதனுடன் சம்பந்தமில்லாத வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஐந்து வீதமானவர்கள் தவறு செய்தமைக்காக மற்றவர்கள் தண்டிக்கப்படக் கூடாது என்பது இவர்களின் வாதம்

அகதிகள் விசாரணையுடன் சம்பந்தப்பட்ட பல வழக்கறிஞர்கள் தங்களது வேலை நேரம், மொழி பெயர்ப்பாளர்களது வேலை நேரம் போன்றவைகளில் ஊழல், துஷ்பிரயோகம் ஆகியவைகளைச் செய்திருப்பதாகவும் சந்தேகிக்கப்பட்டு, இவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கடந்த நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்னைய லீகல் எய்ட் கோரிக்கை மனுக்களும் மீள்பரிசீலனைக்கு எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இன்னமும் வழங்கப்படாத பணத்தின் மீதான கோரிக்கைகள் புலன் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

அதேசமயம், முன்னைய மனுக்களுக்கு வழங்கப் பணம் இல்லாததால் அதனை நிறுத்த அரசாங்கம் விரும்பியதாயினும், அதனை எதிர்த்துப் பல வழக்கறிஞர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க முற்பட்டதும், நீதிமன்றங்களைப் பகிஷ்கரித்து வெளியேறியதும் அரசாங்கம் தனது முன்னைய யோசனையை மாற்றியது. சிறிது சிறிதாக முன்னைய கொடுப்பனவுகளைச் செலுத்த இணக்கம் காணப்பட்டது.

இதற்கிடையில், தற்போதுள்ள நெருக்கடி நிலையைத் தமக்குச் சாதகமாக்கி சில வழக்கறிஞர்கள் தங்கள் கட்சிக்காரர்களிடம் (அகதிநிலைக் கோரிக்கையாளர்களிடமும் கூட) அட்வான்ஸாகப் பணம் பெறுவதாகவும், சிலர் வைப்புப் (Deposit) பணம் என்று கூறி ஆயிரம் டாலர்கள் வரை பெறுவதாகவும் புகார்கள் கூறப்பட்டுள்ளன.

1990ம் ஆண்டுக்குப் பின்னர் மிகக்கூடுதலான அகதிகளை கனடாவுக்குள் வர அனுமதிக்கும் கனடிய மத்திய அரசின் குடிவரவுக் கொள்கை காரணமாகவே பெருமளவில் அகதிகள் ஒன்ராறியோவுக்குள் குடியேறியதாகவும், இதனால் பல்லாயிரம் டாலர்கள் மேலதிகமாக லீகல் எய்ட்டுக்குத் தேவைப்பட்டதாகவும் அரசாங்க அறிக்கையொன்று கூறுகின்றது. 1989ம் ஆண்டில் சுமார் 1000 அகதிகளே இங்கு வந்துள்ளனர். ஆனால் 1992ல் சுமார் 20,000 அகதிகள் வந்துள்ளனர். இது 800 மடங்கு அதிகமாகும்.

இவ்வாறான காரணங்களினால் 1993ம் ஆண்டு சுமார் 50 முதல் 62 மில்லியன் வரையான டாலர்களை மேலதிகமாகச் செலவு செய்ய வேண்டிய தேவை ஒன்ராறியோ லீகல் எய்ட் நிறுவனத்துக்கு ஏற்பட்டது. இந்த மேலதிக செலவினம் வருடாந்தம் அதிகரித்துச் செல்கின்றது.

அதேபோன்று, மோட்டார் சாரதிகள் மீதான வழக்குகளும், பாலியல் தொடர்பான வழக்குகளும் இங்கு பெருமளவில் அதிகரித்துள்ளன. பாலியல் தொடர்பான வழக்குகள் 1988ம் ஆண்டில் 1968 ஆக இருந்தது. ஆனால் இத்தொகை தற்போது வருடமொன்றுக்கு 3,400 வரை அதிகரித்துள்ளது. ஏறத்தாழ இரண்டு மடங்கு கூடியுள்ளது. இதனாலும் லீகல் எய்ட் செலவும் அதிகரித்துள்ளது.

ஒன்ராறியோவில் வருடமொன்றுக்கு 9,192 டாலர்களுக்குக் குறைவாக வருடாந்த வருமானம் பெறும் தனியாள் ஒருவர் தமது வழக்குச் செலவுகளுக்கு லீகல் எய்ட் பெற அருகதையுடையவர். இரண்டு பிள்ளைகளையுடைய பெற்றோர், அவர்களது வருடாந்த வருமானம் 19,608 டாலர்களுக்குக் குறைவாக இருப்பின் லீகல் எய்ட் பெறமுடியும். இதற்கு மேலதிக வருமானமுள்ளவர்களும் தங்கள் செலவுகளைக் காட்டி விண்ணப்பிக்க முடியும். ஆனால் இவர்களுக்குக் கடன் அடிப்படையிலேயே லீகல் எய்ட் உதவி கிடைக்கும்.

# இலங்கையரும் கூட்டு ஸ்பொன்ஸரும்

## Group Sponsorship and SriLankan Refugees

அகதிகளை தனியார் ஐவர் அல்லது அமைப்புகள் ஸ்பொன்ஸர் செய்யும் திட்டம் பற்றி தமிழர் தகவலின் கடந்த இதழில் விபரமான ஒரு கட்டுரை வெளிவந்தது. அரசாங்கத்தினால் இரண்டு மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட பிரசுரமொன்றினை ஆதாரமாகக் கொண்டு அந்தக் கட்டுரை எழுதப்பட்டது.

இதனையடுத்து பலரிடமிருந்தும் எமக்குக் கிடைக்கப்பட்ட பொதுவான கேள்வி, "சொந்த நாட்டிலிருக்கும் உறவினர் அல்லது நண்பர் ஒருவரை கனடாவில் வசிக்கும் ஐந்து பேர் கூட்டாகச் சேர்ந்து ஸ்பொன்ஸர் செய்ய முடியுமா" என்பதாகும். அதாவது, இலங்கையில் வசிக்கும் தங்கள் உறவினரை அல்லது நண்பரைக் கனடாவில் வசிக்கும் நிரந்தரக் குடியுரிமை அல்லது பிரஜாவுரிமை பெற்ற ஐந்து பேர் கூட்டாக ஸ்பொன்ஸர் செய்யலாமா?

இலங்கையிலுள்ள பல குடும்பங்களின் பிள்ளைகள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கும் வேளையில், அவர்களைக் குடும்ப உறவினர்களாக ஸ்பொன்ஸர் செய்ய முடியாதிருப்பதால், ஐவர் கொண்ட குழுவினர் அவர்களை ஸ்பொன்ஸர் செய்யலாம் என்றே பலரும் கருதுகின்றனர். இவ்விடயத்தில் சில விபரங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

தங்கள் சொந்த நாட்டில் வசிக்கும் ஒருவரை இந்தத் திட்டத்தின் கீழ் ஸ்பொன்ஸர் செய்வது சாத்தியமற்றது. அவ்வாறு செய்வதாக இருந்தாலும் அவரை ஒரு அங்கீகரிக்கப்பட்ட அகதி (Convention Refugee) என்று கொழும்பிலுள்ள கனடியத் தூதரகம் முதலில் ஏற்றுக் கொண்டு அதற்குரிய கடிதம் வழங்கவேண்டும். அல்லது, வெளிநாடொன்றில் தங்கியிருந்தால் முதலில் ஐக்கிய நாடுகளின் அகதிகள் தூதரகம் (UNHCR) அதற்குரிய சான்றிதழ் வழங்க வேண்டும்

இலங்கையில் வசிக்கும் ஒருவர் மேற்சொல்லப்பட்ட இரண்டில் ஒன்றைக்கூடப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லையென்றே சொல்ல வேண்டும். ஆதலால் இந்தக் கூட்டு ஸ்பொன்ஸர் விடயம் இலங்கையில் வசிக்கும் தமிழர்களுக்கு உதவப்போகும் ஒரு திட்டமல்ல.

ஆனால் வெளிநாடொன்றில் அகதியாகப் பயணம் செய்கையில் பிடிபட்டு எங்காவது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒருவரை இவ்வாறு கூட்டாக ஐந்து பேர் சேர்ந்து ஸ்பொன்ஸர் செய்ய முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரொறன்ரோவிலுள்ள 12 ஆஸ்பத்திரிகள் மூடப்படும்; அல்லது அருகாமையிலுள்ள ஆஸ்பத்திரிகளுடன் இணைக்கப்படும்; அவசர சிகிச்சை நிலையங்களும் ஆபத்தில்!

ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் மூன்றிலொன்று மூடப்படும்; அல்லது அருகாமையிலுள்ள மற்றொரு ஆஸ்பத்திரியுடன் அவை இணைக்கப்படும். இதன் மூலம் 1.3 பில்லியன் டாலர்களைச் சேமிக்க முடியும் என்று ஒன்ராறியோ மாகாண அரசு மதிப்பிட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளினால் சுமார் மூவாயிரம் பேர் வேலைகளை இழப்பர். அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையொன்று நடைமுறைக்கு வரும் பட்சத்தில் மேற்சொன்னவைகள் நிகழும்.

அதேசமயம், ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள 21 அவசர சிகிச்சைப் பிரிவுகளில் (Emergency Services) ஏழு நிலையங்கள் மூடுவிழாக் காணவுள்ளன. வடஅமெரிக்காவிலேயே மிகப்பெரியதும் நவீன வசதிகளைக் கொண்டதுமான ரொறன்ரோ பெரும்பாகத்தின் வைத்திய சேவையில் முதல்தடவையாக 'வெட்டு' ஏற்படுத்தப்படுவது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இரண்டாண்டுகளுக்குத் தொடர்ச்சியாக இங்குள்ள 44 ஆஸ்பத்திரிகளிலும் கொண்டுவரப்படவுள்ள பல்வேறு மாற்றங்களின் மூலம் இங்கு கடமையாற்றும் ஆயிரம் டாக்டர்களும், பன்னிரண்டாயிரம் ஊழியர்களும் இடமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

“தரமான வைத்திய சேவைகளை வழங்குவதற்கு அதிகளவிலான கட்டடங்களும், கட்டில்களும் தேவையில்லை” என்ற அதிகாரிகளின் கூற்று விசர்த்தனமானது என்று பலரும் கண்டித்துள்ளனர்.

அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கையில் வெலஸ்லி ஆஸ்பத்திரி, ரொறன்ரோ ஆஸ்பத்திரியின் மேற்குப் பிரிவு, Central Hospital, Orthopaedic and Arthritic Hospital, Dewson Hospital, Hillcrest Hospital, Runnymede Hospital, Salvation Army Toronto Grace Hospital ஆகியவைகளை மூடிவிடலாம் என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

ரொறன்ரோ நகரின் மத்தியில் அமைந்திருக்கும் பிரதான ஆஸ்பத்திரியான வெலஸ்லி ஆஸ்பத்திரியின் உள்ளக சிகிச்சைப் பிரிவின் 353 கட்டில்களையும் அகற்றி அதனை மூடிவிடலாம் என்று சிபார்சு செய்யப்பட்டிருப்பதுடன், அதனை வெளிநோயாளர் சிகிச்சை நிலையமாக (Walk-in Centre) ஆகப் பயன்படுத்துமாறும் கூறப்பட்டுள்ளது. Central Hospitalஐயும் இவ்வாறே வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவாகப் பயன்படுத்தச் சிபார்சு வழங்கப்பட்டுள்ளது. சிலவேளைகளில் இரண்டையும் ஒன்றாக இணைக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

மேற்படி ஒன்பது ஆஸ்பத்திரிகளையும் மூடுவதன் மூலம் தினமொன்றுக்கு சுமார் இரண்டாயிரம் உள்ளக நோயாளர் சேவைகள் ரத்துச் செய்யப்படவுள்ளன.

Women's College ஆஸ்பத்திரி Sunnybrook Health Science Centre உடன் இணைக்கப்பட்டு Sunnybrook and Women's Health Science Centre என்று பெயர் மாற்றப்படும்.

## Bitter Medicine for Metro Hospitals




**வெலஸ்லி ஆஸ்பத்திரி மூடப்படுமா?**

Orthopaedic and Arthritic ஆஸ்பத்திரியின் சேவைகள் ரொறன்ரோ கிழக்கு (Coxwell) ஆஸ்பத்திரியுடன் இணைக்கப்படும். Northwestern ஆஸ்பத்திரியின் சேவைகள் Humber Memorial ஆஸ்பத்திரியுடன் இணைக்கப்பட்டு, Nothwestern Humber General Hospital என்று பெயர் மாற்றப்படும்.

ரொறன்ரோ Doctor's Hospitalஇன் சேவைகளும் மட்டுப்படுத்தப்படும். Mount Sinai Hospital, Princess Margaret Hospital, Toronto Hospital ஆகியவைகளில் ஏதாவது ஒன்றில் மட்டுமே அவசர சிகிச்சைப் பிரிவுள்ளதாக மாற்றப்படும். இது வளர்ந்தோருக்கான சேவை நிலையமாக இருக்கும்.

ரொறன்ரோ குழந்தைகள் ஆஸ்பத்திரியின் சேவைகளில் எந்த மாற்றமும் இருக்காது.

ஆஸ்பத்திரிகளை மூடுவது, இணைப்பது தொடர்பான விடயங்களில் சட்ட மாற்றம் கொண்டுவராது எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. அதற்கேற்ற சகல ஒழுங்குகளும் தாமதமின்றி மேற்கொள்ளப்படும் என்று ஒன்ராறியோவின் சுகாதார அமைச்சர் ஜிம் வில்ஸன் அறிவித்துள்ளார்.

ஆஸ்பத்திரிகளை நிர்வகிப்பதற்குச் செலவிடப்படும் 850 மில்லியன் டாலர்களில் ஏறத்தாழ 30 வீதமான பணமும் நிர்வாகச் செலவுகளுக்கும், கட்டட பராமரிப்புகள் மற்றும் அத்தியாவசியமற்ற செலவுகளுக்கும் செல்வதாகவும் இவைகளைக் குறைப்பதானது வைத்திய வசதிகளைக் குறைப்பதாக இருக்காது என்றும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் விளக்கம் தெரிவித்துள்ளன.

“நாளுக்கு நாள் ரொறன்ரோவின் சனத்தொகை அதிகரித்து வருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஆஸ்பத்திரிகளையும் அவற்றின் சேவைகளையும் குறைப்பது நோயாளர்களைச் சாகடிக்கும் செயல்” என்று பொதுமக்கள் அமைப்புக்களும், நலன்விரும்பிகள் சங்கங்களும் கருத்து வெளியிட்டுள்ளன.

ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள 44 ஆஸ்பத்திரிகளும் வருடமொன்றுக்கு 550,000 உள்ளக நோயாளர்களுக்குத் தங்கவைத்துச் சிகிச்சை அளிக்கின்றன. இதுதவிர, 900,000 பேருக்கு வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சையும் வழங்கப்படுகின்றது.

**ONE-QUARTER OF METRO HOSPITALS SHOULD BE CLOSED OR MERGED**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அகிலமெங்கும் நிகழ்ந்த ஐங்கரத்தானின் அற்புதம்; வினைதீர்க்கும் விநாயகர் பால் அருந்திய பக்தி நிகழ்வு



அகிலமெங்குமுள்ள இந்து ஆலயங்களிலும், ஆயிரக்கணக்கான தமிழரது இல்லங்களிலும் பக்தி பரவசமான உண்மை நிகழ்வொன்று கடந்த மாதம் நடைபெற்றது. விக்கிரகமாக அமைந்துள்ள விநாயகர் பெருமான் பசும்பால் அருந்தும் காட்சியைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு அருள் பெற்றதுடன், தாமும் பால் வழங்கி நெஞ்சுருகிப் பிரார்த்தனை நடத்தினர். இந்துக்கள் இலட்சக் கணக்கில் வசிக்கும் இந்தியாவிலும், நேபாளத்திலும் விநாயகப் பெருமான் பால் அருந்துவதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களும் பத்திரிகைகளும் வானொலிகளும் தொலைக் காட்சிகளும் செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து எங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கனடாவிலும் சகல ஆலயங்களிலும் இந்தப் பரவச நிகழ்ச்சி ஆரம்பித்தது. நூற்றுக்கணக்கானவர்களின் இல்லங்களிலும் விநாயகப் பெருமான் பால் அருந்தியதைக் காணக்கூடியதாகவிருந்தது. ஆலயங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் இரவு பகலாக நின்று விநாயகருக்குப் பால் வழங்கி மகிழ்வுற்றனர். நோர்த் யோர்க் விஷ்ணு மந்திர் ஆலயத்தில் நந்தியும் பால்பருகி அதிசயம் காண்பித்தது. கனடாவின் பல ஆங்கிலப் பத்திரிகைகள் விநாயகர் பால் அருந்தும் செய்திக்கு முக்கியத்துவம் வழங்கியிருந்தன. உள்ளூர் தொலைக்காட்சிகளும் தங்கள் ஒளிபரப்பில் அடிக்கடி இதனைக் காண்பித்தன. லண்டன் பி.பி.ஸி வானொலியும், தொலைக்காட்சியும் இவ்விடயத்துக்கு விசேஷ இடம் கொடுத்ததுடன், கருத்தரங்கத்தையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன. பல விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் தங்களது பார்வையில் இதற்கு விளக்கம் கொடுக்க முனைந்தபோதிலும், இறுதியில் இது ஓர் அற்புதம் என்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டி நேர்ந்தது. “மகான் ஒருவர் எங்கோ அவதரித்துள்ளார் என்பதையே இந்த அற்புத நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது” என்பதே அனேகமான இந்துக்களினதும் நம்பிக்கையாக அமைந்துள்ளது. கனடாவில் றிச்மன்ட்ஹில் இந்து ஆலயத்திலும், நோர்த் யோர்க் துர்க்கை அம்மன் ஆலயத்திலும் விநாயகர் பால் அருந்தும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இப்பக்கத்தில் பிரசுரமாகியுள்ளன.

# அடுத்தாண்டு சனத்தொகைச் சேகரிப்பில் இன விபரமும் சேகரிக்கப்படும்

## Race Quiz on Census

கனடாவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை எடுக்கப்படும் குடிசன, புள்ளிவிபரச் சேகரிப்பு அடுத்தாண்டு (1996) நடைபெறவுள்ளது. இந்தச் சனத்தொகைச் சேகரிப்பு நாடளாவிய ரீதியாக நடத்தப்படுவது. மாகாண ரீதியாக அல்லது மாநகரசபை ரீதியாக நடத்தப்படுவதில்லை. ஆனாலும், மாகாணம், மற்றும் நகரங்களில் வசிப்பவர்களின் சனத்தொகை, மற்றும் விபரங்கள் இதன் மூலமே பெறப்படுகின்றது.

அடுத்தாண்டு நடைபெறவுள்ள சனத்தொகை விபரச் சேகரிப்பின்போது முதல் தடவையாக இன ரீதியான விபரங்கள் பெறப்படவுள்ளன. முன்னைய சனத்தொகைச் சேகரிப்புகளின்போது, “ஒருவரது வீட்டு மொழி என்ன?” என்றவாறு மட்டுமே கேள்விகள் கேட்கப்பட்டன. சிலர், அவர்கள் வேறுநாட்டவர்களாக இருந்த போதிலும் வீட்டில் ஆங்கிலத்திலேயே உரையாடுவதனால், தங்கள் வீட்டுமொழி ஆங்கிலம் என்று தெரிவித்துள்ளனர். இதன் காரணத்தினால் இன ரீதியான விபரங்களை இதற்கு முன்னர் உத்தியோகபூர்வமாகப் பெறமுடியாது போய்விட்டது.

தற்போது சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டு, சனத்தொகைக் கேள்விக் கொத்தில் இனம் தொடர்பான கேள்விகள் சேர்க்கப்பட்டுள்ளன. கட்டாயமாக இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க வேண்டும் தவறினால் ஐநூறு டாலர்கள் வரை தண்டம் வழங்கப்படலாம் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கனடாவில் வசிக்கும் சிறுபான்மை இனங்கள் பற்றிய சரியான விபரங்களைச் சேகரிப்பதன் மூலம் அவர்களது இனவிகிதாசார வேலைவாய்ப்புப் போன்ற பல விடயங்களில் சமத்துவ உரிமை கிடைக்கச் செய்ய இது உதவும் என்று அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பல்வேறு இன மக்களின் அமைப்புகளும், சில அரசியல் கட்சிகளும் இன ரீதியான புள்ளி விபரச் சேகரிப்பினைப் பலமாகக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஒருவரைப் பார்த்து “நீர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?” என்று கேள்வி கேட்பதே ‘இனத்துவேஷமான நடவடிக்கை’ என்று சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆதலால் இந்த விபரங்கள் சேகரிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்று பலமான குரல்கள் கிளம்பியுள்ளன.

1996ம் ஆண்டுக்கான சனத்தொகை விபரச் சேகரிப்புக் கேள்விக் கொத்தின் 19வது கேள்வியாக இன ரீதியான விபரம் (27ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுவர்களின் உடற் பருமனும் தொலைக்காட்சிச் சாதனமும்

# Obesity in Children and T.V Watching

இந் நாட்டில் எங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் தொலைக்காட்சிச் சாதனம் எத்தகைய முக்கிய இடத்தைப் பெறுகிறது என்பதனை எமக்கு எவருமே எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஒரு நாள் எங்கள் வீடுகளில் டி.வி பழுதடைந்து விடுமாகில் எம் குழந்தைகள் என்ன செய்வார்களோ தெரியாது. வீட்டிற்குள் வந்தவுடன் சாப்பாட்டைக் கையில் எடுக்கும் முன்பு பிள்ளைகள் கையில் எடுப்பது remote control ஐ தான். பல வீடுகளில் பிள்ளை பராமரிப்பு சாதனமாக இன்று டி.வி விளங்குகிறது. ஓடியாடிப் பிள்ளைகள் குளப்படி செய்யாமல், ஒரு இடமாக இருந்து டி.வி க்குள் முகத்தைப் புதைத்து கொண்டிருப்பது பெற்றோருக்கும் பெரும் ஆறுதலாக இருக்கிறது. டி.வி இல்லாவிட்டால் ஓடியாடித் திரியும் வயதிலுள்ள பிள்ளைகளை எவ்வாறு இந்த நாட்டில் பராமரிக்க முடியும் என வெளிப்படையாகவே அங்கலாய்க்கும் பெற்றோர்களைக் கூட நாம் காண்கிறோம்.

டி.வி பார்ப்பதனால் பிள்ளைகளின் மனோநிலை பாரதூரமாகப் பாதிக்கப்படுவது எம் எல்லோருக்கும் தெரிந்த விடயம். அது சம்பந்தமாகப் பல பத்திரிகைகளும், குழந்தை நலன்புரிச் சங்கங்களும் நாளாந்தம் செய்திகள் விடுத்த வண்ணம் இருக்கின்றன. தற்பொழுது டி.வி பார்ப்பதனால் பிள்ளைகளிடையே ஒரு புதுப் பிரச்சனை ஏற்பட்டுள்ளதை கனடா வைத்திய சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. 6-11 வயதிற்கிடைப்பட்ட குழந்தைகளிடையே உடற்பருமன் அதிகரிக்கும் தன்மை 50% அதிகரித்துள்ளது. 12-17 வயதிற்கிடைப்பட்ட குழந்தைகளின் மத்தியில் உடற்பருமன் அதிகரிக்கும் தன்மை 40% அதிகரித்துள்ளது. (Study by Physician John Lefebre). கடந்த 15 ஆண்டு காலத்தில் குழந்தைகளிடையே உடற்பருமன் அதிகரிக்கும் தன்மை 50% அதிகரித்துள்ளது என ஜோன் லிபிரேயின் ஆராய்ச்சிகள் எடுத்து இயம்புகின்றன. அது மாத்திரமன்றி 60% கனடா குழந்தைகள் சராசரி உடல் உறுதித் தரத்தை அடையவில்லை என அறிகிறோம்.

சராசரியாக ஒரு பிள்ளை ஒரு வாரத்தில் 26 மணித்தியாலங்கள் வரை டி.வி பார்ப்பதாகக் கணக்கிட்டுள்ளனர். இந்நேரம் ஒருவிதமான உடற்பயிற்சியும் இல்லாமலேயே செலவிடப்படுகிறது. அத்துடன் மாத்திரமன்றிப் பல குழந்தைகள் டி.வி பார்க்கும் பொழுது உடற் சுகத்திற்கு ஊறு விளைவிக்கும் உருளைக்கிழங்குப் பொரியல், சொக்லெட் முதலிய சிற்றுண்டிகளைக் கொறிக்கும் பழக்கத்தினை மேற்கொண்டுள்ளனர். இது தவிரச் சராசரியாக 25-30 மணித்தியாலங்கள் ஒரு பிள்ளை பாடசாலை மேசையிலிருந்து செயலாற்றுகிறது. பாடசாலை நேரத்தில் வாரத்தில் இருமுறை மாத்திரமே உடற்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவை யாவும் ஒருங்கிணைந்து இன்று உடற்பருமன் கூடிய ஒரு குழந்தைச் சமுதாயத்தை உருவாக்கியுள்ளது.

டி.வி யில் பிள்ளைகளுக்கு அறிவூட்டும் எத்தனையோ நல்ல நிகழ்ச்சிகள் காட்டப்படுகின்றன. அந்நேரத்தில் அவர்களின் உள நலத்திற்கு ஊறு விளைவிக்கும் பல நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன. பெற்றோர்கள் எந்தெந்த நிகழ்ச்சிகள் பிள்ளைகள் பார்ப்பதற்கு உரியன என்பதனை டி.வி


**கனகேஸ்வரி நடராஜா**
Teacher
Yorkdale S. S, North York


வழிகாட்டி கையில் கிடைத்தவுடனேயே, பிள்ளைகளையும் கூட இருத்தி முடிவு செய்ய வேண்டும். எல்லா நேரமும் டி.வி நேரமாக அமையக் கூடாது. இரவு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பிற்பாடு பிள்ளைகள் டி.வி பார்ப்பதனை பெற்றோர் தடைசெய்தல் அவசியம். எத்தனையோ புத்தகங்களை வாசித்தாலும் பெறமுடியாத அறிவினை, ஒரு சில மணித்தியாலங்களில் பெறக்கூடியதாக சில கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகள் அமைகின்றன. பல நாட்கள் ஒரு நாட்டில் பிரயாணம் செய்தால் கூட பார்த்து முடிக்க முடியாத ஒரு நாட்டினைப் பற்றிய விபரங்களை வீட்டில் இருந்தபடியே பார்த்து மகிழ்கிறோம். அத்துடன் மாத்திரமன்றி இவை யாவும் மிகவும் துல்லியமாகவும், விளக்கமாகவும், நுணுக்கமாகவும், திறமைமிக்க படப்பிடிப்பாளர்களால், நுணுக்கமான புகைப்படக் கருவிகளைக் கொண்டு படம் பிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிகழ்ச்சிகளை பிள்ளைகள் பார்ப்பதற்கு பெற்றோர் ஊக்குவித்தல் வேண்டும். சில சமயங்களில் இவை சம்பந்தமான அறிவு எங்களிலும் பார்க்க பிள்ளைகளுக்கு அதிகம் உண்டு. எங்களுக்கு அவற்றை விளங்கப்படுத்துவதில் அவர்கள் பெருமையும் சந்தோஷமும் அடைகிறார்கள். இத்தகைய கலந்துரையாடல்கள் வீட்டு வேலையும், கந்தோர் வேலையுமாகப் பிள்ளைகளோடு அளவளாவக் கூட நேரம் கிடையாமல் அலைந்து திரியும் எம் குடும்பங்களில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையில் மிகவும் நெருக்கத்தை ஏற்படுத்துகின்றன. அத்துடன் சிறு வயதிலேயே தரமான நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு எமது பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்கிறோம். வசதிகள் கூடிய பெற்றோர் இந்நிகழ்ச்சிகளை பார்த்ததோடு நிற்காமல், மேலும் அவை சம்பந்தமான நூல்களை நூல் நிலையங்களில் எடுத்துப் பிள்ளைகளிடம் கொடுத்து, தாமும் அவர்களோடு சேர்ந்து வாசித்துக் கலந்துரையாடலாம். இதனால் பிள்ளைகளுக்குப் புத்தகங்களை வாசிப்பதற்கு ஆர்வமும் ஆசையும் ஏற்படும்.

குறிப்பிட்ட நேரத்தில் டி.வி பார்த்த பின்பு பிள்ளைகளுக்கு விளையாடுவதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும் தாராளமாக நேரம் இருக்கும். இங்கு பல சன சமூக நிலையங்களில் எல்லாவிதமான விளையாட்டுக்களும் விளையாட வசதி உண்டு. இந் நிலையங்களுக்குப் பெற்றோர் பிள்ளைகளை கூட்டிச் செல்லுதல் அவசியம். பல பெற்றோர்கள் தங்களுக்கு நேரம் இல்லையெனக் குறைப்படுகிறார்கள். பல குடும்பத்தவர்கள் ஒன்றிணைந்து ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு வீட்டிலுள்ள பெரியவர் முறையெடுத்து, இரண்டு மூன்று குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளை ஒரு பெரியவர் கூட்டிச் செல்லலாம். இதனால் இது ஒரு சிரமமான காரியமாகத் தென்பட மாட்டாது.

இங்குள்ள சகல பாடசாலைகளும் பிள்ளைகள் வீட்டிலிருந்து நடந்து போகக் கூடிய தூரத்திலேயே அமைந்துள்ளன. ஆயினும் பல பெற்றோர்கள் பிள்ளைகளைக் கார்களிலோ, அன்றேல் பஸ் வண்டியிலோ பாடசாலைக்கு அனுப்புவதைக் காண்கிறோம். பிள்ளைகளை பாடசாலைக்கு நடந்து போக ஊக்குவித்தல் அவசியம். இதனால் பிள்ளைகளுக்கும் உடற்பயிற்சியாகிறது, காசும் மிச்சமாகிறது.

இந்நாட்டு வாழ்க்கைப் பாணியில் வாரம் ஒரு முறையே எம்மில் பெரும்பாலானோர் வீட்டிற்குத் தேவையான உணவுப் பண்டங்களை வாங்குவதற்கு வசதியாக உள்ளது. அதனால் கொழுப்புச் சத்து அதிகமானதும், சத்துப் பெறுமானமற்றதுமான உணவுப் பொருட்களை பிள்ளைகளுக்கு விருப்பம் என்ற காரணத்திற்காக வாங்கி, குளிர்சாதனப் பெட்டியை நிரப்பி விடுகிறோம். இவற்றைப் பிள்ளைகள்

(23ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிஞர் கந்தவனம் தரும்

# கனடிய காட்சிகள்

## பாசவலை

'எப்படிக் கழிந்தது வார இறுதி?'
'அதையேன் கேட்கிறாய், போ!'
'ஏன், என்ன நடந்தது?
'பிரான்டிக்குச் சுகமில்லை'

என்னுடன் வேலை பார்க்கும் ஒருவருக்கு விக்டர் என்று பெயர். ஆங்கிலேயர். என்னிலும் மூத்தவர். இவரிலும் இவரது மனைவிக்கு வயது அதிகம். அவர் வேலையிலிருந்து ஏற்கனவே ஓய்வுபெற்றுவிட்டார்.

விக்டர் எவருடனும் இலகுவில் பழகமாட்டார். என்னுடன் கொஞ்சம் பரவாயில்லை. ஒன்றாக இருந்தே தேநீர் அருந்துவோம்; ஒன்றாகவே சாப்பிடுவோம். சாப்பாட்டை ஒரு கதையுடன் ஆரம்பிப்பார். அதற்கு ஓர் ஆரம்பம், உச்சக் கட்டம், முடிவு என்பன போன்ற சிறுகதை உத்திகள் எல்லாம் இருக்கும். ஒரு சின்ன விடயம் என்றாலும்கூட அதற்கு மூக்கும் முழியும் வைத்து இரசித்து இரசித்துச் சொல்லுவார். அவரது கதைச்சுவை உணவை இன்னும் சுவையாக்கும்.

சாப்பிட்டுக் கொண்டு பேசுகையில் அவரது உச்சரிப்பு சிலவேளை எனக்கு விளங்காமற் போய்விடும். 'என்னது' என்று ஒருமுறை கேட்டதற்கு அவர் சொன்ன பதில்: 'அட மண்டு, இதற்கு மேலே உரத்துப் பேசினால் முன்னால் உள்ள வாங்கில் இருந்து சாப்பிடும் அந்த ஆட்டுத் தாடிக்காரனுக்குக் கேட்டு விடும். நான் சொல்லும் கதையே அவனைப் பற்றியதுதான்.'

இப்படியாக நகைச்சுவைக் கயிறுகள் திரிக்கும் நண்பர் அன்று சோகக் கதை ஒன்றைச் சொன்னார்.

'பிராண்டியை நான் அவ்விதமான துன்பநிலையில் ஒரு போதும் கண்டதில்லை. மிகவும் சுறுசுறுப்பானவன். ஆனால் சனி இரவு படுக்கப் போனவன் ஞாயிறு காலை எழுந்திருக்கவேயில்லை. கூப்பிட்டுப் பார்த்தேன். ஆள் வரவில்லை. எனக்கு என்னவோபோல் இருந்தது. கூப்பிட்டவாறே அவன் படுத்திருந்த இடத்தை அடைந்தேன். அனுங்கினான்; நிமிர்த்திப் பார்த்தேன்; மீண்டும் படுத்து விட்டான். உடனேயே டாக்டருக்குப் போன் செய்தேன். அவரை உடனடியாகப் பிடிக்க முடியவில்லை. செய்தியை ஒலிப்பதிவில் விட்டிருந்தேன். நான்கு மணியளவில் அழைத்தார். விடயத்தை விளங்கப்படுத்தினேன். பயப்படத் தேவையில்லை. திங்கள் பார்த்துக் கொள்ளலாம் என்றார். இல்லை, இப்பொழுதே பார்க்க வேண்டும் என்றேன். கிளினிக் பூட்டு என்றார். வீட்டுக்கு வாருங்கள் என்றேன். செலவு அதிகமாகும் என்றார். என்ன செலவு ஆனாலும் பரவாயில்லை என்றேன். வந்து பார்த்து ஊசி ஒன்று போட்டார். சாப்பாட்டுக் கோளாறு என்றும், ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை என்றும் ஆறுதல் கூறினார். பாவம் பிராண்டி, ஞாயிறு முழுவதும் ஒன்றுமே சாப்பிடவில்லை. இன்று காலைதான் கொஞ்சம் சாப்பிட்டான். அந்த அளவில் கொஞ்சம் திருப்தி.. சொன்னால் நம்பமாட்டாய். எனது மனைவி நேற்று முழுவதும் அழுதபடி...' என்று சொன்னபோது அவரது குரலும் சற்றுத் தளதளத்தது.

பிராண்டியைப் பற்றி விக்டர் முன்னரும் என்னிடம் கூறியிருக்கிறார். இவர்களது இரண்டு பெண்பிள்ளைகளும் தனிக்குடித்தனம் நடத்தத் தொடங்கிய நாளிலிருந்து வீட்டில் இவர்கள் மட்டுந்தான். ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து மனைவியார் வீட்டில் தனித்து இருக்கின்றாரே என்ற கவலையில் பிறந்தநாள் பரிசாக நாய்க்குட்டி ஒன்றை வாங்கிக் கொடுத்தார் அன்புக் கணவர் அதற்குத்தான் பிராண்டி என்று பெயர்.

கனடிய மக்களுக்குச் செல்லப் பிராணிகளை வளர்த்தல் நல்லதொரு பாசவலைப் பொழுதுபோக்கு. செல்லப் பிராணிகளுக்குச் சிலைகூட எழுப்பி இருக்கிறார்கள். நாயாய்ப் பிறந்தாலும் கனடாவில் வந்து பிறக்கவேண்டும்; செல்லப் பிராணியாக வளரவேண்டும்.

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!

-திருவாசகம்

# வேலையற்றகால காப்புறுதியில் மேலும் பல வெட்டுகள்?

# Ottawa to cut Unemployment Insurance?

வேலையற்றகால காப்புறுதித் திட்டத்தில் எதிர்பாராத பல வெட்டுகளைக் கொண்டிருக்கும் பல மாறுதல்களைக் கொண்டுவர மத்திய அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது. அமைச்சரவையின் பரிசீலனைக்கென ரகசிய ஆவணமொன்றும் இதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அமைச்சரவை ஏற்கனவே இவ்விடயம் பற்றி ஆலோசித்துள்ளதாயினும் இறுதி முடிவுகள் இன்னமும் எடுக்கப்படவில்லை. எனினும் வழங்கப்பட்டுள்ள சிபார்சுகள் ஏற்கப்படலாம் என்று நம்பப்படுகின்றது. அவற்றுள் பின்வருவன இடம்பெறலாம்:

தற்போது ஆகக்கூடிய காலமாக 50 வாரங்களுக்கு வேலையற்ற காலக் காப்புறுதி வழங்கப்படுகின்றது. இது 45 வாரங்களாகக் குறைக்கப்படும்.

பகுதிநேர அடிப்படையில் பணி புரிபவர்களுக்கு வேலையற்ற காலக் காப்புறுதி வழங்குவதை நீக்குவது பற்றி ஆலோசனை.

ஏற்கனவே பத்து வாரங்களுக்கு மேலாக வேலையற்ற காலக் காப்புறுதியைக் கடந்த ஐந்து வருடங்களில் பெற்றவர்களைத் தண்டிக்கும் வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தல். இவர்களது வேலையற்ற காலக் காப்புறுதித் தொகையினைப் பத்து வீதத்தினால் குறைக்கலாம். அத்துடன், கடந்த ஐந்து ஆண்டு காலத்துக்குள் ஒவ்வொரு வருடமும் இருபது வாரங்கள் காப்புறுதி பெற்ற ஒருவர், அவரது காப்புறுதிப் பணத் தொகையை அவரது மாதச் சம்பளத் தொகையின் 45 வீதமாக (வழமையாக 55 வீதம் வழங்கப்படும்) குறைப்பது.

ஆகக்கூடிய வருமானம் பெற்றவர்கள் தங்களது வேலைக் காலக் காப்புறுதியின் ஒரு பகுதியை மீளச் செலுத்த வேண்டும் என்ற சட்டத்தின் கீழ், ஆகக்கூடிய சம்பளமாக 63,570 டாலர்கள் வரையறுக்கப்பட்டிருந்தது. இதனை 52,975 டாலர்களாகக் குறைக்க ஆலோசிக்கப்படுகின்றது.

* கியுபெக் மாகாணத்தின் சுயாட்சிக் கோரிக்கை மீதான சர்வஜன வாக்கெடுப்பு இந்த மாதம் 30ம் திகதி நடைபெறவுள்ளதால், அதற்குப் பின்னரே மேற்குறிப்பிட்ட மாற்றங்களை நடைமுறைக்குக் கொண்டு வருவது பற்றி அரசாங்கம் தீர்மானம் எடுக்கும் என்று கூறப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பிரஜாவுரிமை பரீட்சையில் மேலும் மாற்றங்கள் வரும்

## New changes in Citizenship exam.

பிரஜாவுரிமைப் பரீட்சை அமைப்பிலும், பிரஜாவுரிமை வழங்கும் முறையிலும் பல மாற்றங்கள் விரைவில் வரவிருக்கின்றன. புதிதாகப் பிரஜாவுரிமை நீதிபதிகளை நியமனம் செய்யாமல், ஏற்கனவே கனடிய சிறப்புப் பிரஜைகளுக்கான விருது பெற்றவர்கள் முன்னிலையில் பிரஜாவுரிமைச் சத்தியப் பிரமாண வைபவங்களை நடத்த முடிவாகியுள்ளது.

தற்போது பிரஜாவுரிமை நீதிபதிகளாகக் கடமையாற்றுபவர்கள் அவர்களது பதவிக்காலம் முடியும் வரை பணிபுரிய முடியும். அதன் பின்னர் அவர்கள் மீள நியமிக்கப்பட மாட்டார்கள். புதிதாகவும் எவரும் நியமனமாகமாட்டார்கள்.

பிரஜாவுரிமை வழங்கும் சத்தியப்பிரமாண வைபவங்களை கத்தோலிக்க குடிவரவு நிலையம் போன்ற சமூக சேவை நிறுவனங்களில் நடத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கேற்ற வகையில் பிரஜாவுரிமைப் பரீட்சைக்கு அபேட்சகர்களைத் தயார் செய்யும் வகுப்புகள் இந்த நிலையங்களில் நடத்தப்படும்.

பிரஜாவுரிமை நேர்முகப் பரீட்சைக்குச் செல்லவிருப்பவர்கள் பொது அறிவு ரீதியாகவும், மொழி ரீதியாகவும் சுயேட்சையாகக் கற்றுத் தயார்பபண்ண உதவியாக "A Look at Canada" (கனடா மீதான ஒரு பார்வை) என்னும் கைநூல் ஒன்றை பிரஜாவுரிமைத் திணைக்களம் தயாரித்துள்ளது. இவ்வருடம் ஜுலை மாதம் முதலாம் திகதியிலிருந்து இந்தப் புதிய கைநூல் பாவனைக்கு வந்துள்ளது. இதில் மொத்தம் இருநூறு கேள்வி-பதில்கள் அடங்கியுள்ளன.

மாதிரித் திட்டமொன்றின் கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட பிரஜாவுரிமைத் திணைக்கள அலுவலகங்களில் மேற்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் இந்தக் கைநூல் வழங்கப்படுகின்றது. இவ்வருட இறுதிக்குள் சகல அலுவலகங்களிலும் இக்கைநூலைப் பெறக்கூடியதாகவிருக்கும்.

முன்னர் வழங்கப்பட்டு வந்த The Canadian Citizen (நீல நிற அட்டையுள்ள புத்தகம்), A look at Canada (கனடிய சரித்திரம், புவியியல் ஆகியவைகளை விளக்கும் மடிக்கக்கூடிய கை நூல்) ஆகிய இரண்டுக்கும் பதிலாகப் புதிய கைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலிருக்கும் பொது அறிவு, மொழித் தகைமை எனப்படும் பரீட்சை முறையிலும் சில மாற்றங்கள் வரவுள்ளன. எதிர்காலத்தில், சிறிய கேள்வி பதில்கள், கீறிட்ட இடங்களில் பதிலளிக்கக்கூடிய கேள்விகள் என்பன அடங்கத்தக்கதாக மாற்றம் அமையவுள்ளது. தற்போது இருபது கேள்விகள் மட்டுமே கேட்கப்படுகின்றன. ஆனால் வருங்காலத்தில் இக்கேள்விகள் தொகை அதிகமாகும்.

பிரஜாவுரிமை விண்ணப்பதாரிகள் கனடிய உத்தியோக மொழிகளில் கூடுதலான பரிச்சயம் உடையவர்களாகவும், கனடாவைப் பற்றிய அதிகளவு பொது அறிவு உடையவர்களாகவும் இருப்பதை உறுதிப்படுத்தக்கூடியதாக எதிர்காலப் பரீட்சைகள் அமையும்.

பிரஜாவுரிமைப் பரீட்சையின் போது அதிகமாகக் கேட்கப்படும் சில பொதுவான கேள்விகள் அதற்குரிய பதில்களுடன் இங்கு மாதிரிக்குத் தரப்படுகின்றது:

கனடியப் பிரஜாவுரிமைச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்னர் இந்த நாட்டில் வசித்த மக்கள் எந்த நாட்டுப் பிரஜைகளாக இருந்தனர்? பிரிட்டிஷ் பிரஜைகளாகவிருந்தனர்.

கனடிய வாசிகளில் எத்தனை வீதமானவர்கள் பிரிட்டிஷ் அல்லது பிரெஞ்சு இனத்தவரல்லாத மற்றைய இனத்தவர்களாக இருந்தனர்? இருபத்தைந்து வீதத்தினர்.

கனடாவில் எத்தனை அரசாங்கங்கள் உண்டு? அவை யாவை? மூன்று - மத்திய, மாகாண, மாநகர அரசாங்கங்கள்.

தேர்தலில் வாக்களிக்கும் வயது இருபதிலிருந்து பதினெட்டாக எந்த ஆண்டில் குறைக்கப்பட்டது? 1970ம் ஆண்டில்.

கனடியர்களான கார்மிச்சேல், ஹரிஸ், ஜாக்ஸன், ஜோன்ஸ்ரன், லிஸ்மர், மக்டொனால்ட், வார்லி ஆகியோர் சேர்ந்து 1920ம் ஆண்டில் ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். இது பொதுவாக என்ன பெயரால் அழைக்கப்பட்டது? எழுவர் குழு, நவீன கலைஞர்கள்.

கனடிய பிரஜைகளில் எத்தனை வீதமான-வர்கள் வெளிநாட்டுப் பிரஜாவுரிமையையும் வைத்துள்ளனர்? 1991 சனத்தொகை மதிப்பீட்டின் பிரகாரம் இரண்டு வீதத்தினர்.

1992ம் ஆண்டில் கனடாவில் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் கூடுதலாக கனடிய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பம் செய்தனர்? பிரிட்டிஷ்.

எத்தனையாம் ஆண்டு அரசியல் யாப்பில் கனடிய உரிமையும் சுதந்திரமும் சேர்க்கப்பட்டுப் பிரகடனஞ் செய்யப்பட்டது? 1982ம் ஆண்டு.

கனடிய அரசியல் யாப்பில் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பூர்வீகக் குடிகளின் பெயர் என்ன? இந்தியர், இனுய்ற், மெற்றிஸ்.

கனடிய பிரஜாவுரிமைச் சட்டம் எத்தனையாம் ஆண்டு பிரகடனஞ் செய்யப்பட்டது? 1947ம் ஆண்டில்.

கனடாவின் மூன்றாவது எல்லைப் பிரதேசமாக சேர்க்கப்படவிருக்கும் பிரதேசத்தின் பெயர் என்ன? நுனாவிற்.

கனடாவில் பிறந்தவர்களுக்கா அல்லது கனடாவில் குடியேறிப் பிரஜாவுரிமை பெற்றவர்களுக்கா கூடுதலான உரிமைகளும் கடமைகளும் உண்டு? இருவருக்கும் சம உரிமை உண்டு.

கடைசியாக எடுக்கப்பட்ட குடிசனத் தொகைக் கணிப்பின் பிரகாரம் கனடிய மக்கள் தொகையில் இங்கு குடியேறியவர்களின் விகிதாசாரம் எவ்வளவு? 16 வீதம்.

கனடியரான ஜேம்ஸ் நய்ஸ்மித் என்பவரால் கூடைப்பந்தாட்டம் எந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது? 1891ம் ஆண்டில்.

கனடாவில் முதன் முதலாகப் பறந்த விமானத்தின் பெயர் என்ன? எந்த இடத்திலிருந்து எந்த இடத்துக்குப் பறந்து சென்றது? 1909ம் ஆண்டில் ஸில்வர் டார்ட் என்ற விமானம் பெடக் பே (Baddeck Bay) என்ற இடத்திலிருந்து நொவாஸ்கோஸியாவுக்குப் பறந்து சென்றது.

பிரஜாவுரிமை பெறத் தகுதியான குடிவரவாளர்களில், 1991ம் ஆண்டில் பிரஜாவுரிமை பெற்றவர்கள் எத்தனை வீதத்தினர்? 1991ம் ஆண்டின் சனத்தொகைக் கணக்கின் பிரகாரம் 81 வீதத்தினர்.

கனடிய நாடாளுமன்றம் மூன்று அங்கங்களால் இணைக்கப்பட்டது. அவை யாவை? மகாராணி, செனட் சபை, சனப்பிரதிநிதிகள் சபை.

கனடாவை ஆட்சி புரியும் அரசியல் கட்சி எது? லிபரல் கட்சி

ஒன்ராறியோவை ஆட்சி செய்யும் அரசியல் கட்சி எது? புறொகிறஸிவ் கன்ஸர்வேடிவ் கட்சி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வேலை இழப்பினை ஈடுசெய்யும் அடமான காப்புறுதித் திட்டம்
# Jobloss Mortgage Insurance Program

வீடு வாங்குபவர்களின் நலனை முன்னிட்டும், நிரந்தரமற்ற பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக வேலை இழக்கும் அபாயம் ஏற்படுமிடத்து அதனை ஈடுசெய்யும் நோக்குடனும் அறிமுகம் செய்யப்பட்ட வேலை இழப்பினை ஈடுசெய்யும் அடமான காப்புறுதித் திட்டம் எதிர்பார்த்ததைவிட அதிக அளவில் வெற்றியளித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணத்தில் 1993ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டம் Ontario Real Estate Association என்னும் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு Thompson and Associates Ltd நிறுவனத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் வருடத்தில் ஐநூறுக்கும் மேற்பட்டோர் சேர்ந்து கொண்டதாகவும், தற்போது ஆயிரத்துக்கும் அதிகமானோர் சேர்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. அல்பேர்ட்டா, மனிடோபா ஆகிய மாகாணங்களிலும் இத்திட்டம் ஏற்கனவே அமலிலிருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்தக் காப்புறுதித் திட்டத்தில் சேர விரும்பும் ஒருவர் 18 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவராக இருப்பதோடு கனடாவில் வசிப்பவராகவும் இருக்க வேண்டும். மேலும் கடந்த 12 மாதகாலம் (ஆகக் குறைந்தது கிழமைக்கு முப்பது மணித்தியாலங்களாவது) தொடர்ந்து வேலை செய்தவராக இருக்க வேண்டும். ஒரே நிறுவனத்திலோ அல்லது வெவ்வேறு நிறுவனங்களிலோ வேலை செய்திருக்கலாம். ஒருவர் தொடர்ந்து வேலை செய்திருக்கவேண்டும் என்பதே முக்கிய நிபந்தனையாகும்.

கொள்முதல் செய்யப்படும் வீடு புதிய வீடாகவோ மீள்விற்பனை வீடாகவோ இருக்கலாம். ஆனால் Real Estate Boardஇல் அங்கத்தவராகவுள்ள தரகர் (Realtor) ஒருவர் மூலம் வாங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இக்காப்புறுதித் திட்டத்தில் சேரமுடியாது. எனினும் இருவர், அல்லது கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாங்கும்போது ஒருவர் சுயதொழில் செய்பவராகவும், மற்றவர் நிறுவனமொன்றில் தொழில் புரிபவராகவும் இருக்கலாம். வீடு கொள்முதல் செய்யப்பட்டு அறுபது நாட்களுக்குள் இக்காப்புறுதித் திட்டத்தில் சேரவிரும்புபவர்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

வீடுவாங்கிய ஒருவர் வேலை இழப்பின், வீட்டு அடமானம், (mortgage) உட்பட சொத்துவரி (Property tax) ஆயுள் காப்புறுதித் தவணைக் கட்டணம் (Life Insurance Premium) என்பவை அனைத்தும் உட்பட மாதம் 2500 டாலர்கள் வரை ஒரு வருட காலத்துக்கு இக்காப்புறுதித் திட்டம் ஈடுசெய்யும். வீடு வாங்கியவரால் செலுத்தப்பட வேண்டிய மேற்படி கொடுப்பனவுகள் எவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தனவோ (மாதத்துக்கு ஒரு தடவை அல்லது இரு வாரத்துக்கு ஒரு தடவை அல்லது வாராந்தம்) அதே ஒழுங்கில் காப்புறுதித் தாபனம் கொடுப்பனவுகளைச் செலுத்தி வரும்.

நூறு டாலர் அடமானக் கொடுப்பனவுக்கு மாதம் 4 டாலர் 85 சதம் என்ற அடிப்படையில் வேலையிழப்புக் காப்புறுதிக்கான தவணைக் கட்டணம் அமைகின்றது. உதாரணமாக, மாதம் ஆயிரம் டாலர்கள் அடமானக் கொடுப்பனவுக்கு காப்புறுதித் தவணைக் கட்டணமாக 48 டாலர்கள் 50 சதம் செலுத்த வேண்டும்.. இதனை மாதத்துக்கு ஒரு முறையாகவோ அல்லது வருடத்துக்கு ஒரு தடவையாகவோ செலுத்தலாம். வீடு வாங்கிய ஒருவர் வேலையிழப்பின், குறிப்பிட்ட வேலையை இழந்த நாளிலிருந்து அறுபது நாட்களின் பின்னர் காப்புறுதிக் கம்பனி கொடுப்பனவுகளைச் செலுத்தத் தொடங்கும். அவர் மீண்டும் வேலை பெற்று விட்டால், வேலை பெற்ற நாளிலிருந்து ஒரு மாத காலத்துக்கு காப்புறுதிக் கம்பனி கொடுப்பனவுகளைச் செய்யும்.

தொழிலை ராஜினாமா செய்தால், தாமாக விரும்பிப் பதவியிலிருந்து விலகினால், இளைப்பாறுதல், குறிப்பிட்ட வயதுக்கு முன்னர் இளைப்பாறுதல், வேலை நிறுத்தம், பருவகால வேலையின்மை, யுத்தம், மரணம், அங்கவீனமாதல் போன்ற காரணங்களால், ஏற்படும் வேலை இழப்புகள் இக்காப்புறுதித் திட்டத்தில் உள்ளடங்கா.

இருவர் சேர்ந்து இருவரது பெயரிலும் வீடு வாங்கும்போது தனித்தனியாகவோ அல்லது இருவரும் சேர்ந்தோ காப்புறுதித் திட்டத்தில் சேரலாம். இருவரும் இணைந்து காப்புறுதித் திட்டத்தில் சேரும்போது அவர்களின் வருமான வரி விகிதத்துக்கேற்ப மாதாந்த தவணைக் கட்டணம் பகிரப்பட்டு காப்புறுதிக் கம்பனியால் அறவிடப்படும். அவர்களில் ஒருவர் வேலை இழப்பின் அவர்கள் செலுத்திய தவணைக் கட்டண விகிதத்துக்கேற்ப காப்புறுதிக் கம்பனி கொடுப்பனவுகளைச் செலுத்தும்.

ஆனால் தனித்தனியாகக் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்திருப்பின் ஒருவர் வேலை இழப்பினும், முழுக் கொடுப்பனவுகளையும் காப்புறுதிக் கம்பனி முழுமையாகப் பொறுப்பேற்கும். இக்காப்புறுதித் திட்டத்தின் மூலம் ஒருவர் பெறும் சலுகைகள், மத்திய அரசின் கீழ் செயற்படும் வேலையற்ற கால காப்புறுதிச் சலுகைகளை எவ்விதத்திலும் பாதிக்கமாட்டாது.

வேலையிழப்புக் காப்புறுதிச் சட்டத்தின் சலுகைகளை ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளும் பெறமுடியும். குறிப்பாக, ஏற்கனவே வேலையிழந்து சலுகைகளை அனுபவித்த ஒருவர், மீண்டும் வேலையில் சேர்ந்து ஆறு மாதங்களின் பின்னர் மீண்டும் வேலையிழப்பின் அறுபது நாளிலிருந்து ஒரு வருடத்துக்கான கொடுப்பனவுகளை காப்புறுதிக் கம்பனி செலுத்தி வரும்.

குறைந்த விலையில் சிறந்த வீடுகளை வாங்கக்கூடிய தன்மை, விரும்பிய இடத்தில் வசதியான வீடுகளை வாங்கக்கூடிய சந்தர்ப்பம், குறைந்தளவு அடிப்படைப் பணத்தில் வீடு வாங்கக்கூடிய வசதி, நியாயமான வட்டி வீதம், ஒன்ராறியோ மாகாண அரசின் வீட்டுரிமைச் சேமிப்புத் திட்டம், மத்திய அரசின் பதிவு செய்யப்பட்ட ஓய்வூதியப் பணத்தை வீடு வாங்கப் பயன்படுத்தும் திட்டம் போன்ற பல்வேறு வசதிகள் காணப்பட்ட போதிலும் பலர் வீடு வாங்கத் தயங்குவதற்கு வேலையில் நிரந்தரமற்ற தன்மையே முக்கிய காரணம் என உணரப்பட்டதையடுத்தே இக்காப்புறுதித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

அண்மைக் காலங்களில் வீடு வாங்குபவர் களில் பலர் இந்தக் காப்புறுதித் திட்டத்தில் சேர்ந்து வருவது அதன் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்துவதாகவுள்ளது. இக்காப்புறுதித் திட்டம் பற்றிய மேலதிக விபரங்களையும் சிறு பிரசுரங்களையும் 416-622-4512 அல்லது 1-800-665-5511 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெறமுடியும்.

**வே. விவேகானந்தன்**
பி. ஏ (சிறப்பு) இலங்கை

## தீபாவளித் திருநாள் 23 திகதி திங்கட்கிழமை

தீபாவளித் திருநாள் இந்த மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை. அன்றைய தினம் கேதார கௌரி விரதமும் முடிவுபெறும். மறுநாளான செவ்வாய்க்கிழமை 24ம் திகதி கந்தர் சஷ்டி விரதம் ஆரம்பமாகும். 28ம் திகதி சனிக்கிழமை சூரன் போர் உற்சவம் நிகழும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மணிவிழாக் காணும் 'மகாஜனன்' பொ. கனகசபாபதி அவர்களை வாழ்த்தி ஈழநாடு பதிப்பகம் வழங்கிய

# வாழ்த்துப்பா

சீரோங்கும் ஈழவள நாட்டில் கல்வி
சிறந்தோங்க வேண்டுமெனச் சிந்தை தன்னில்
நீரோங்கும் சடையிறைவன் நினைத்தே தந்த
நித்திலமே! மகாஜன அதிபர் கோவே!
வேரோங்கி ஆடுமரம் அசோகம் போல
விண்ணோக்கி வாழுபுகழ் வேந்தே நீங்கள்
பாரோங்கும் பைந்தமிழர் கல்வி ஓங்கப்
பணிபுரிந்தே பல்லாண்டு வாழி! வாழி!!

இலங்குமொளி இலாம்பருகில் இருளில் வீட்டில்
இருந்துபடித் துழன்றபல இளைஞர் எல்லாம்
விலங்கியலைக் கற்றுணரச் செய்தாய்! வாழ்வில்
விளையாட்டில் புகழ்பெறவும் வைத்தாய் அன்னார்
கலங்குமொரு குடிதாங்கும் தூணாய் மாறக்
கற்பித்தே கடைந்தெடுத்தாய்! கடமை செய்தாய்!
துலங்குமொரு நூறுபல டாக்டர்ப் பட்டம்
தூயவனே உன்னுழைப்பின் பலனே அன்றோ!

விஞ்ஞானக் கல்விக்குள் வீழ்ந்தோர் எல்லாம்
விரல்தொட்டும் பார்ப்பதில்லைக் கலையை அன்னார்
அஞ்ஞான அறிவோங்க அகன்றே நின்று
அப்புறமாய்ப் போய்விடுவர் ஐயா நீங்கள்
மெய்ஞான நூல்களொடு மேலும் நாவல்
மேதினியில் கற்றதனால் அன்றோ இன்றும்
பொய்ஞானம் கொண்டாரைப் பொறித்துக் காட்டிப்
புடம்போடும் தன்மையெலாம்? அதனால் வாழி!

போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர்கள் தூற்றட்டும் என்றே நீங்கள்
மாற்றிவைத்த விதிமுறைகள் மக்கள் வாழ்வை
மங்கவைத்த சாதிவெறி எல்லாம் போக்கி
ஆற்றிவந்த தொண்டுகளை அறிந்தே பெற்றார்
அன்புடனே துணைசெய்தார் அருகில் நின்றார்
கூற்றுடன்று எதிர்வரினும் கொண்ட கொள்ளை
குலைவடைந்து போகவிடாக் குன்றே வாழி!

அலையொதுங்கும் சருகெனவே ஆடி ஓய்ந்து
அமைதியுடன் இருப்பவர்கள் மலிந்த நாட்டில்
நிலையொதுங்கும் தமிழ்க்குலத்தை நிறுத்த வேண்டி
நித்திரையும் மறந்துழைக்கும் ஐயா நீங்கள்
தலையொதுங்கும் பிறையிறைவன் தந்த சொத்தாய்த்
தமிழ்க்குடிகள் கனடாவில் போற்றும் என்றும்
மலையொதுங்கும் சிறுகொடிகள் போன்றே உங்கள்
மலரடியில் படர்ந்திடுவோம் வாழி! வாழி!!

இன்றுங்கள் மணிவிழா! எங்கள் வாழ்வில்
இனியதொரு திருவிழா! ஈழ நாட்டில்
அன்றுங்கள் கீழிருந்தோம் அதுபோல் இன்றும்
அதிபருக்குக் கீழிருப்போம்! அதிலே இன்பம்!
என்றுங்கள் அருகிருந்து வாழ்வோம்? அன்றோ
ஏங்குபவர் ஊரிருக்க இங்கே தெய்வம்
கன்றென்றுக் கதன்தாயைக் காட்டு மாறே
காட்டியவிக் கருணைக்கோர் கைமா றென்னே!

*இனிய தோழமையுடன்*
T.K*பரமேஸ்வரன், ப.சிவா*

www.tamilarangam.net

www.tamilarangam.net

# நெஞ்சே வாழ்த்து

சஞ்சிகைகள் பத்திரிகை நாவல் மேலும்
சஞ்சரிக்கும் சிறுதுண்டுச் செய்தி எல்லாம்
நெஞ்சினிக்க வாசிக்கும் கோமான் இங்கே
நீண்டபல கட்டுரைகள் எழுதும் வேந்தன்
கொஞ்சுதமிழ் ஈழநில மகா ஜனாவில்
கோயிலுற்ற அதிபரெனும் கொள்கைத் தெய்வம்
பிஞ்சுமனக் கனகசபா பதியாம் ஐயன்
பேசுபுகழ் மணிவிழாவை வாழ்த்தாய் நெஞ்சே!

சென்னையிலே கல்வியுற்றார் சென்னை மண்ணில்
சிறந்தவொரு மாணவனாய்ச் சிறப்புப் பெற்றார்
அன்னைநிலம் ஈழமதில் அதிபர் ஆகி
அரியபல தொண்டுகளை ஆக்கித் தந்தார்
என்னவிது இவருடைய ஆற்றல்? என்றே
எதிரிகளும் வியந்துரைத்துப் போற்றும் வண்ணம்
தன்னைமுழுதாய்க் கொடுத்தார் மகா ஜனாவில்
தங்கமகன் மணிவிழாவை வாழ்த்தாய் நெஞ்சே!

பரவிநிற்கும் கலாச்சாரம் பலவே யாகிப்
படர்ந்திருக்கும் கனடாவில் அவற்றைப் பேணி
விரவிநிற்கும் பணியேற்று 'நோர்த்யோக்' கல்வி
விளங்குசபை அமர்ந்தமுதல் தமிழர் ஆனார்
அரவி நிற்கும் அரம்போலும் அநாக ரீகம்
அடியோடு சாய்ந்துவிட அன்னார் செய்யும்
'இரவியொளி போலும்பணி எண்ணிப் பார்த்தே
இருகரமும் குவித்தவரை வாழ்த்தாய் நெஞ்சே!

எத்தனையோ அமைப்புகளின் தலைவர் ஆனார்
எத்தனையோ பொதுப்பணியின் வித்தும் ஆனார்
எத்தனையோ பிரச்சனைக்குத் தீர்வும் ஆனார்
எத்தனையோ மனிதருக்குத் துணையும் ஆனார்
எத்தனையோ பிழைப்புக்கவர் பகையும் ஆனார்
எத்தனையோ பேருக்கவர் ஏணி ஆனார்
எத்தனையோ மானுடர்கள் என்ன செய்தார்?
என்பதையும் நிலைத்தவரை வாழ்த்தாய் நெஞ்சே!

சின்னவரோ பெரியவரோ சிறப்புத் தந்து
சிரித்தபடி பேசுபவர் ஒருவர் உண்டேல்
தன்னவரோ தன்பகையோ தவிக்கும் நேரம்
தலைகொடுக்கும் மனவுணர்வுக் குருவம் உண்டேல்
பின்னவர்கள் சிறப்புறவே வேண்டும் என்றே
பின்னோக்கி உழைக்குமொரு பிறப்பும் உண்டேல்
மன்னவனாம் கனகசபா பதியே கண்டாய்
மகிழ்ந்துவிதம் பணிந்தவரை வாழ்த்தாய் நெஞ்சே!

நின்வாழ்வு கருதவிலைத் தமிழன் வாழ்வே
நிலையாகக் கருதுகிறாய் நாடும் வீடும்
பொன்வாழ்வு வாழ்வதற்கு முயல்வோய் உன்னைப்
போற்றுகின்றோம் வாழ்த்துகின்றோம் மானம் விட்டுப்
புன்வாழ்வு வாழ்பவர்கள் வாழட்டும் நீ
புதுவாழ்வு தமிழ்வாழ்வு வாழ்க பொ.க!
என்னாடு போற்றுவது நின்போல் வாழ்ந்த
எம்மவரை நல்லவரை அன்றோ! ஆமாம்.

**அன்பன் இரா. சம்பந்தன்**

www.tamilarangam.net

www.tamilarangam.net



# "உடனடியாக வேலைக்குச் சென்றால் பிரச்சனை தீரும்" என்கிறார் சமூக சேவைகள் அமைச்சர்; "வேலை எங்கே இருக்கிறது; சொல்லுங்கள்-போகிறோம்" என்கிறார்கள் பாதிக்கப்பட்ட மக்கள்.

ஒன்ராறியோவின் புதிய அரசாங்கம் கடந்த ஜூன் மாதம் தேர்தலில் வெற்றி பெற்றவுடன் அறிவித்தவாறு, இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து வெல்ஃபெயர் எனப்படும் பொதுநலப் படியில் 21.6 வீதக் குறைப்பினை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது. இந்த மாதத்துக்குரிய பொதுநலப்படி சகலருக்கும் செப்டம்பர் மாதக் கடைசி வாரத்தில் அனுப்பப்பட்டது. பொதுநலக் குறைப்புப் பற்றி ஏற்கனவே செய்திகளாக விடயத்தைப் பலரும் தெரிந்து வைத்திருந்த போதிலும், பணம் வங்கிக்கு வந்த பின்னரே 'உண்மையாகக் குறைக்கப்பட்டுவிட்டது" என்பதை உணர்ந்து அவர்கள் அதிர்ச்சிக்குள்ளாகினர்.

செய்வதறியாது திகைத்த பலரும் தமக்கு அண்மையிலுள்ள பொதுநல சேவை அமைப்புகளுக்கும், சமூக சேவை நிறுவனங்களுக்கும் படையெடுக்கத் தொடங்கினர். செப்டம்பர் கடைசி வாரத்தில் தங்களுக்கு வந்த பெருந்தொகையான தொலைபேசி அழைப்புகளும் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தே வந்ததாக ரொறன்ரோவின் மிகப்பெரிய அமைப்பொன்றின் முக்கியஸ்தர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்தில் தங்களாலும் எதுவுமே செய்ய முடியாதிருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். ஆகக்கூடியதாக 663 டாலர்கள் பொதுநலப்படி பெற்ற ஒருவர் இந்த மாதத்தில் 520 டாலர்களையே பெற்றுள்ளார். ஒரு பிள்ளையுடனான பெற்றோரின் மாதப் படி 264 டாலர்களினாலும், இரு பிள்ளைகளுடனான பெற்றாரின் தொகை 335 டாலர்களினாலும் குறைக்கப்பட்டுள்ளது. ஆகக்கூடுதலாகப் பாதிக்கப்பட்டவர்கள் ஒற்றைப் பெற்றோர். அதாவது, பிள்ளைகளைப் பராமரித்து வளர்த்து வரும் தாய் அல்லது தகப்பன். ஒன்ராறியோ மாகாணத்தில் பொதுநலப்படி பெற்றுவரும் ஒரு மில்லியன் ஆட்களில் சுமார் இருபது லட்சம் பேர் ஒற்றைப் பெற்றோர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொருவருக்கும் இந்த மாதம் வழங்கப்பட்ட பொதுநலப்படி அவரது ஆகக்குறைந்த வாடகையைச் செலுத்திய பின்னர் நாளாந்தச் செலவுக்கு ஆறரை டாலர்களை மட்டுமே கொண்டிருப்பதாகவும், இந்த ஆறரை டாலரில் மூன்று நேர உணவு, தேநீர்-பானங்கள், உடுப்பு, போக்குவரத்துச் செலவு, பாடசாலைக்குச் சென்று வருதல் போன்ற சகல செலவுகளையும் கவனிக்க வேண்டியிருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. பொதுநலப்படிக் குறைப்பு நேரடியாக 514,000 வளர்ந்தோரையும், 520,000 குழந்தைகளையும் பாதித்துள்ளது. இவ்விடயத்தில் அரசாங்கம் மிகவும் கடும் போக்கினைக் கடைப்பிடித்து வருகின்றது.

## பொதுநலப்படி குறைப்பினால் குடும்பங்கள் பல பட்டினியில்; குழந்தைகள் உணவின்றித் தவிப்பு!

'ஒன்ராறியோவினது கஜானாவில் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வது" என்ற ஒன்றினை மட்டுமே தனது கருமமாகக் கொண்டு செயலில் இறங்கியிருக்கும் மைக் ஹரிஸ் தலைமையிலான மாகாண அரசாங்கம், மக்கள் பிரச்சனை பற்றியோ அவர்கள் பட்டினி நிலை பற்றியோ கவலை கொள்வதாகத் தெரியவில்லை.

"பொதுநலப்படிக் குறைப்பினால் பல குடும்பங்களில் பிள்ளைகள் பட்டினி நிலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே" என்று பத்திரிகையாளர் ஒருவர் இதற்குப் பொறுப்பான சமூக சேவைகள் அமைச்சரின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டுவந்தபோது அதற்குப் பதிலளித்த அமைச்சர், 'அவ்வாறு பாதிக்கப்படும் குடும்பங்களின் பெற்றோர் உடனடியாகப் பகுதிநேர வேலையொன்றைப் பெற்று நிலைமையைச் சரி செய்யலாம்' என்று வெகு 'ஸிம்பிளாகத்' தெரிவித்துள்ளார்.

'உடனடியாக அவர்களால் எங்கே வேலை பெறமுடியும்" என்று பத்திரிகையாளர் அடுத்த கேள்வியைத் தொடுத்தார். "இதில் உடனடியாக என்ற பேச்சுக்கு இடமில்லை. நாங்கள் இந்தக் குறைப்புப் பற்றி மூன்று மாதத்துக்கு முன்னரே அறிவித்திருந்தோம் போதிய முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டது. எனவே இந்தக் காலப்பகுதிக்குள் அவர்கள் முயற்சித்திருந்தால் தற்காலிக அல்லது பகுதிநேர வேலை ஒன்றினைப் பெற்று, தங்களுக்கு ஏற்பட்ட வெட்டினைச் சமாளித்திருக்கலாம்" என்று அமைச்சர் பதிலளித்துள்ளார்.

அமைச்சர் இதுபற்றி மேலும் விளக்குகையில் பின்வருமாறு தெரிவித்தார்: "1400 டாலர்களை மாதாந்தம் பொதுநலப்படியாகப் பெற்ற ஒருவருக்கு இந்த மாதம் 1100 டாலர்கள் மட்டுமே கிடைத்ததாக வைத்துக் கொள்வோம். 300 டாலர்கள் இவருக்கு வெட்டு ஏற்பட்டுள்ளது. எனவே ஏதாவது ஒரு வேலையின் மூலம் மாதம் 300 டாலர்களை அவர்கள் பெறுவார்களானால் அதில் எந்த வகையிலும் அரசாங்கம் கை வைக்காது. முன்னைய பொதுநலப்படித் தொகையை இலக்காக வைத்து அவர்கள் வருமானம் பெறுவதை நாங்கள் உற்சாகப்படுத்துகின்றோம்" என்பதே அமைச்சரின் பதில்.

இந்த வெட்டுத் தொகையிலும் பார்க்க மேலதிகமாக மாதாந்தம் ஒருவர் உழைப்பாரானால் அந்த மேலதிக உழைப்புக்கு வீதாசாரக் கழிப்பு இருக்கும். அடுத்தடுத்த மாதங்களில் இதனை இலகுவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

இருப்பினும், வெட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக வேலைக்குச் செல்லலாம் என்ற அமைச்சரின் கூற்றுக்குப் பலத்த எதிர்ப்புத் தோன்றியுள்ளது. "வேலை எங்கே இருக்கிறது" என்பதே பொதுவான கேள்வி. "அந்த இடத்தைச் சொல்லுங்கள்; நாங்கள் உடனடியாகச் செல்கின்றோம்" என்று பொதுநலப்படிக் குறைப்பினால் பாதிக்கப்பட்ட பலரும் குரல் எழுப்பியுள்ளனர் அதற்குப் பதிலளிக்கும் நிலையில் அரசாங்க தரப்பினர் இல்லை.

இதன் எதிரொலியாக செப்டம்பர் 27ம் திகதி புதிய அரசாங்கத்தின் முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தை மாகாண லெப்டினன்ட் கவர்னர் ஹால் ஜக்மன் நிகழ்த்திக் கொண்டிருக்கையில் குயின்ஸ்பார்க் மாகாண அரச கட்டடத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்த பாதிக்கப்பட்டோர் இறுதியில் ஆத்திரமடைந்தவர்களாக கட்டடத்தின் மீது கல்வீச்சு நடத்தி கண்ணாடிகளை நொருக்கினர். இறுதியில் பொலிஸார் கண்ணீர்ப் புகையும் குண்டாந்தடிப் பிரயோகமும் நிகழ்த்தி கலகக்காரரைக் காயப்படுத்திக் கலைக்க நேர்ந்தது.

பொதுநலப்படிக் குறைப்பினால் பாதிக்கப்பட்டு தங்கள் குழந்தைகளுக்கு உணவு வழங்க முடியாத பெற்றோர் விடயத்தில் 'குழந்தைகள் நலன்புரிச் சங்கம்' (Children's Aid Soiciety) உதவலாம் என்ற சமூக சேவைகள் அமைச்சர் David Tsubochi அவர்களின் அறிவிப்பு சங்கத்தினருக்கு எரிச்சலை ஊட்டியுள்ளது. முதலமைச்சரோ இன்னும் ஒரு படி மேலேபோய், குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்காக பொதுநலப்படி வழங்கப்படவில்லை என்றும், தொழிலில்லாதவர்கள் தொழில் தேடுவதற்காகவே இப்பணம் வழங்கப்படுவதாகவும் கூறியுள்ளார்.

ஏற்கனவேயே வறுமைக் கோட்டுக்குக் கீழ் ஜீவியம் நடத்தி வரும் அப்பாவி மக்களை பொதுநலப்படிக் குறைப்பு மேலும் கீழே தள்ளி வீழ்த்தியுள்ளது என்பதே பல்வேறு ஆய்வாளர்களினதும் கருத்தாகும்.

ரஞ்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எமது பிள்ளைகள் பலருக்கு பற்களின் ஒழுங்கீனத்திற்கு சிகிச்சை தேவைப்படுவது ஏன்?

## MORE KIDS ARE NOW SEEKING ORTHODONTIC TREATMENT?

"ஏன் இப்பொழுது எங்கள் குழந்தைகளின் பற்கள் வடிவாக முளைப்பதில்லை? எங்கள் காலத்தில் யார் பல்லுக்கு கம்பி போட்டுச் சரி செய்தவை?" என பெற்றோர்கள் வியப்பாகக் கேட்பதை நான் காண்கிறேன்.

வேதனை தரும் பற்களைப் பிடுங்குவதற்கே அநேகர் இலங்கையில் பல்வைத்தியரை நாடி வந்தனர். அதற்கு எதிர்மாறாக இங்கு பற்கள் அபூர்வமாகவே அகற்றப்படுகின்றன. பற்களைப் பேணுவதிலும் அதனைச் சரி செய்வதிலுமே பல்வைத்தியர்கள் இந் நாட்டில் தமது முழுக் கவனத்தையும் செலுத்துகின்றார்கள்.

நவீன பூமி ஒன்றில் நாம் வாழும் பொழுது இங்குள்ள நவீன சேவைகளையும் பெறும் வாய்ப்புக் கிட்டுகிறது. பாடசாலை மாணவ மாணவிகள் தமது பற்களுக்கு 'Braces' போட்டிருப்பதையும் அதன் தேவையையும் உபயோகத்தையும் எமது பிள்ளைகளும் அறிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. மேலும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பல்வைத்தியரிடம் சென்று காண்பிக்கும் பொழுது பற்களை ஒழுங்கு செய்ய வேண்டிய அவசியத்தை பல்வைத்தியர் எடுத்துக் கூறுகின்றார். இதனால் பற்களில் உள்ள குறைபாடுகள் பற்றி அறியவும் அதைச் சரிசெய்ய வேண்டிய அவசியத்தையும் எமது மக்கள் பலர் அறிகின்றார்கள். நமது நாடு போலன்றி இந்தச் சிகிச்சைகளை வழங்கத் தேர்ச்சி பெற்ற பல்வைத்தியர்களும் வல்லுனர்களும் இங்கு இருப்பது எமக்குப் பெரிதும் உதவியாக இருப்பதை நான் அறியாமலில்லை.

தமது குழந்தைகளில் ஒழுங்கற்ற பற்களைச் சீர் செய்வதற்கு எமது பெற்றோர்களின் ஆவல் அதிகரித்திருப்பதைக் கடந்த சில வருடங்களாக நான் அவதானித்து வருகிறேன்.

பல்வைத்திய சேவை தினமும் நவீனமடைந்து வருகிறது. பற்களை நிமிர்த்துதல் (Straightening teeth), பற்களை வெண்மையாக்குதல், வெண்மை நிறத்தில் பற்களை நிரப்புதல் (white fillings), லேசரின் (Laser) பாவனை, கம்பியூட்டரின் உபயோகம் என்பனவற்றில் பாரிய அளவில் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் 5, 10 வருடங்களில் எல்லாமே புதுவிதமாகிவிடும் என்று சொல்லுவதில் எனக்கொரு தயக்கமில்லை.

பற்கள் அவலட்சணமாக இருப்பது எமது ஊழ்வினை என எண்ணி நாம் "சும்மா இருந்து" விடவேண்டியதில்லை. தேவைப்படும் சிகிச்சைகளை எமது வருங்கால சந்ததியினருக்குப் பெற்றுக் கொடுப்பதில் ஒரு பொல்லாப்பும் இல்லை.

இனி பல் ஒழுங்கீனத்தை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று பார்ப்போம்.

பெற்றோருக்கும் அவர்களின் மூதாதையர்ளுக்கும் உள்ள பல் தாடை ஒழுங்கீனங்கள் அவர்கள் பிள்ளைகளுக்கும் ஏற்படுவது தடுக்க முடியாததே! எமது குழந்தைகளுக்கு ஏற்படும் இந்த நிலைக்கு நாமும் ஒரு காரணம் என்பதை நான் மறைமுகமாக சுட்டிக் காட்ட விரும்புகிறேன். எனினும் எமது காலத்தில் கிடைக்காத பல்வைத்திய வசதி எமது குழந்தைகளுக்குக் கிட்டியுள்ளது அவர்களின் அதிர்ஷ்டமென்றே சொல்ல வேண்டும்.

உங்கள் பிள்ளைகளை மூன்று வயதிலிருந்தே (பற்களில் எதுவித குறைகள் இல்லாவிடினும்) பல்வைத்தியரிடம் காட்டி வரவேண்டியது அவசியமாகும். குறைகள் ஒன்றுமில்லையாயின் வருடத்திற்கு ஒரு தடவையாவது இவர்களை நான் பார்வையிடுவது வழக்கம். பின்பு நிரந்தரப் பற்கள் தோன்றும் பொழுது சுமார் 6, 7

**டாக்டர். அ. சண்முகவடிவேல்**
குடும்ப பல் வைத்தியர்
**Family Dentist**

வயதிலிருந்து 6 மாதத்திற்கு ஒரு தடவையாவது கூட்டி வரும்படி சொல்லி வருகின்றேன். இக்காலப் பொழுதில் தேவைப்படும் சிறு சிகிச்சைகள் மூலம் சில விரும்பத்தகாத விளைவுகளைத் தவிர்க்க முடியும் என்பது எனது கருத்து.

விரல், உதடுகள், நாக்குப் பழக்கம் இருப்பின் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும். மேல்தாடை ஒடுங்கியிருப்பின் அதை விரிவடையச் செய்ய வேண்டியதும் (expansion of constricted axches), புதிதாக முளைக்கும் மேற்பற்கள் கீழ்ப் பற்களுக்குள் அகப்பட்டிருப்பின் (cross bite) அவற்றை வெளிக் கொண்டு வரவேண்டியதும் அவசியமாகும்.

எமது குழந்தைகளின் முகத்தின் முன்பாகத்திலுள்ள நிரந்தரமான மேற்பற்களுடன் கீழ்ப் பற்கள் முட்டிக் கொள்ளாது இடைவெளியாக இருப்பின் (No anterior fulcrum) அவற்றைச் சரிசெய்ய வேண்டியது அவசியமாகும்.

ஒருசில பிள்ளைகள் மூக்கினால் மூச்சு விடாது வாயினால் சுவாசித்து வருவதை (mouth breathers) அவதானித்திருப்பீர்கள் என நினைக்கிறேன். இவர்களை நாசி, மூக்கு, தொண்டை சம்பந்தமான வைத்தியரிடம் அனுப்பிச் சிகிச்சை தேவைப்படின் பெறச் செய்வது நன்மை பயக்கும்.

தாடை வளர்ச்சியில் குறைபாடு காரணமாக சிலருக்கு பற்கள் அவலட்சணமாக இருப்பது போல் தோன்றுகின்றது. இப்படிப்பட்டவர்களுக்கு கீழ்த்தாடை வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் சிகிச்சை உரிய நேரத்தில் அளிப்பது உகந்தது. தாடை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தத் தலையில் வார்கள் (Head gear) அணியவேண்டிய அவசியம் ஏற்படலாம். இதை சில பிள்ளைகளும் பெற்றோரும் விரும்புவதில்லை. சிலர் இதைச் சரிவர உபயோகிப்பதில்லை. இதன் காரணமாக நான் எதிர்பார்க்கின்ற நல்ல விளைவுகளை காண முடிவதில்லை. எனவே பிள்ளைகளின் பரிபூரண இணக்கம் இன்றி எமது சிகிச்சை வெற்றி பெற மாட்டாது என்பதை நாம் சிகிச்சை ஆரம்பத்திலிருந்தே கூறி வருகிறோம்.

வாயில் 'braces' போட்டிருப்பவர்கள் தமது பற்களை மிகவும் துப்பரவாக வைத்திருக்க வேண்டியது அவசியமாகும். இல்லாவிடில் முரசு பாதிப்படைந்து சிகிச்சைக்கு இடையூறு விளைவிக்கும். ஏற்கனவே முரசு பழுதடைந்திருப்பவர்கள் அதைச் சுகநிலைக்குக் கொண்டு வந்த பின்னரே பற்களுக்குக் 'கிளிப்' போடுவதற்கு ஏற்றவர்களாவார்கள்.

பற்களைச் சரிசெய்யும் நோக்குடன் சிலருக்கு சில பற்களை அகற்றவேண்டிய அவசியமேற்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பு பலருக்குப் பற்கள் கழட்டிய பின்பே சிகிச்சை புரிவது வழக்கமாக இருந்தது. ஆனால் இப்பொழுது அத்தியாவசிய தேவை ஏற்பட்டால் மாத்திரமே பற்களை எடுக்க வேண்டும் என்ற முடிவுக்கு நாம் வருகின்றோம். பற்கள் சிலவற்றை நீக்காது இவர்களுக்குச் சிகிச்சை அளிப்பின் விரும்பத்தக்க பலனை எதிர்பார்க்க முடியாது. எனினும் பற்களைப் பிடுங்குவதற்கு சில பெற்றோர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். மேற்பற்களைப் பிடுங்குவதால் வேறு பாதிப்புகள் ஏற்படலாம் என்று வீண் பீதியடைகிறார்கள்.

ஒருவருக்கு எந்த முறையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற முடிவை எடுப்பதற்கு முன்னர் இவர்களின் குறைகளை நாம் நன்கு ஆராய்வோம். (27ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆத்மஜோதி நா. முத்தையாவுக்கு கனடியத் தமிழர் அளித்த இறுதி மரியாதை

துன்பத்தில் தொங்கிய முகங்கள்; தூரத்தால் துவளாத கால்கள்; ஒருவர்பின் ஒருவராக மூன்று சமவரிசைத் தொடர்கள்; போகப்போக நீண்டுகொண்டே போகும் பக்தர் தொடர். பஜனை ஒலிகள் தேவலோகத்தைப் பரவசப்படுத்தியிருத்தல் வேண்டும். இடையிடையே வாகனங்களை ஒதுக்கும் நகர்க்காவலர் இருவர். இவ்விதம் ஆத்மஜோதி ஐயா அவர்களின் பூதவுடலை அன்பர்கள் டொன்மில்ஸ் தெருவழியாக ஊர்வலப் பாங்கில் எடுத்துச் சென்றமை உள்ளத்தை உருக்குவதாக இருந்தது. தாயகத்தில் பாத யாத்திரை வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பல யாத்திரைகளை முன்னின்று நடத்திய மகானின் பூதவுடலை யாத்திரைப்படுத்தியது அவருக்குச் செய்த நன்றிக்கடனாகும்

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் 08.09.1995 வெள்ளிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு மொன்றியலிலுள்ள ஜுவிஸ் மருத்துவ மனையில் தமது 77வது வயதில் இறைவனடி எய்திவிட்டார்கள். மொன்றியல் துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேக வைபவத்தையொட்டி அன்று மாலை அவரது சமயப் பிரசங்கம் நடைபெறவிருந்தது.

ஆத்மஜோதி அவர்கள் தமிழீழத்து ஏழாலையில் 1918ம் ஆண்டு வைகாசி மாதம் 25ம் திகதி பெரியார் நாகமணிக்கும் பொன்னுப்பிள்ளை அம்மையாருக்கும் பிறந்தவர். திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1937-39 பகுதியில் கல்வி பயின்று ஆசிரியர் தகைமை பெற்றார். இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் உத்தம மாணாக்கர். முத்தையா அவர்கள் 1939ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் திகதி நாவலப்பிட்டி சென்மேரிஸ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1948ம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகாவித்தியாலயத்துக்கு மாற்றம் பெற்று பிற்காலத்தில் அதிபராகப் பதவி உயர்வும் பெற்று ஓய்வுபெறும் வரை அங்கேயே கடமையாற்றினார். பெரியார் க. இராமச்சந்திரா அவர்களின் தூண்டுதலினால் 1948ம் ஆண்டு 'ஆத்மஜோதி' சஞ்சிகையை ஆரம்பித்து அதன் மூலம் சமய அறிவைப் பரப்பும் பணியில் ஈடுபட்டார். ஆத்மஜோதி அச்சகம் 1983ம் ஆண்டுக் கலவரத்தில் முற்றாக அழிக்கப்பட்டது.

தமிழீழத்தில் இந்து சமயப் பேரவைத் தலைவராகக் கடமையாற்றிக் கைதடி சைவ அனாதைச் சிறுவர் இல்லத்தையும் பொறுப்பேற்று நடத்தி வந்தார்.

கடந்த ஆண்டு கனடாவில் நடைபெற்ற அனைத் துலகச் சைவ சித்தாந்த மகாநாட்டில் கலந்து கொள்ள வருகை தந்திருந்தபோது, ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை அவருக்குப் பாராட்டு விழா எடுத்து "ஞானசுரபி" என்ற பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தது. தமது சமயப் பணியைத் தொடருவதற் காகவும், கைதடிச் சிறுவர் இல்லத்துக்கு நிதி திரட்டு வதற்காகவும் உலக யாத்திரை ஒன்றினை மேற்கொ ண்டு கனடாவுக்கு இவ்வாண்டும் வருகை தந்திருந் தார். அவரது 'தரிசனம்' என்னும் நூல் கடந்த மாதம் நான்காம் திகதி ஸ்காபரோவில் வெளியிடப்பெற்றது. இதே விழாவில் வைத்து கவிஞர் கந்தவனம் அவர் களால் எழுதப்பெற்ற ஆத்மஜோதி அவர்களின் வாழ்க் கையைத் தரிசிக்கும் 'முத்தான தொண்டர்' என்ற நூலும் வெளியிடப்பெற்றது தெய்வ அனுகூலமாகும்.

ஆத்மஜோதி அவர்களின் பூதவுடல் மொன்றியலில் கடந்த மாதம் பத்தாம் திகதி பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. இதற்கான செலவுகளை அங்குள்ள சைவப் பெருமக்கள் பொறுப்பேற்றிருந்தனர். அதன்பின் பூதவுடல் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையிடம் ரொறன்ரோவில் ஒப்படைக்கப்பட்டது. ஸ்காபரோவிலுள்ள ஓக்டன் மரணச் சடங்கு மனையில் செப்டம்பர் 14ம்15ம் திகதிகளில் பொதுமக்கள் பார்வைக் காக வைக்கப்பட்டது. இரு தினங்களிலும் பஜனை வழிபாடும், இரங்கல் உரைகளும் இடம்பெற்றன. இறுதிக் கிரியைகள் 16ம் திகதி சனிக்கிழமை காலை முதல் நடைபெற்றன. அன்று காலை ஒன்பது மணியளவில் பூதவுடல் ஸ்டீல்/டொன்மில்ஸ் சந்திப்பிலிருந்து நோர்த் யோர்க்கிலுள்ள Highland Memorial Gardens மயானத்துக்கு ஊர்வ லமாக எடுத்துச் செல்லப்பட்டது. அச்சமயம் ஸ்ரீபிரகாஸ்மயானந்தா அவர்களின் தலைமையில் அன்பர்கள் பஜனைகள் பாடியவண்ணம் சென்றனர்.

இறுதி ஊர்வலம் சென்றுகொண்டிருந்த வேளையில் கீதவாணி வானொலி நிலையம் நேர்முகவர்ணனையினை நடத்தி இங்கு வாழும் அனைத்துத் தமிழர் இல்லங்களுக்கும் அந்தச் சோகச் செய்தியினை எடுத்துச் சென்றது. தமிழோசை ஒலிபரப்புக் கலைஞர்கள் ஸ்தலத்தில் நின்று தொகுத்து வழங்கிய நேர்முக உரைகளில் 'ரேடியோ ஏசியா' கலைஞர்களும் பங்கெடுத்துக் கொண்டனர்.

மயான வாயிலில் ஆத்மஜோதி அவர்களின் பூதவுடல், தண்டிகை வடிவில் நறுமலர்களால் அமைக்கப்பட்ட பாடை ஒன்றினில் வைக்கப்பெற்று அடியவர்களால் சுமந்து வரப்பெற்றது. வீதி முழுவதும் மலர்கள் தூவப்பெற்றன. மயான மண்டபத்தினுள் அலங்கரிக்கப்பட்ட பந்தர் ஒன்றின்கீழ் பூதவுடல் வைக்கப்பட்டு வருகை தந்திருந்த ஒவ்வொருவரும் இறுதிவணக்கம் செலுத்த வாய்ப்பளிக்கப்பட்டது. அவ்வேளையில் இரங்கலுரைகளும், பஜனைகளும் மாறிமாறி இடம்பெற்றன.
12.30 மணியளவில் இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகின. இறுதிக் கடன்களை ஆகம முறைப்படி ஆத்மஜோதி அவர்களின் தமையனார் கந்தையா அவர்களின் மகன் ஸ்ரீமுருகதாஸ் நிறைவுசெய்ய, ஆத்மஜோதி அவர்களின் பூதவுடல் அக்கினியுடன் இரண்டறக் கலந்தது. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பணி ஆற்றிய ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மறைவு தமிழுலகுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். ஒன்ராறியோ மாகாணத்தில் இயங்கும் இந்து சமயப் பேரவை அவரது பணிகளைத் தொடர்ந்துசெய்ய உறுதி பூண்டுள்ளமை 'ஆத்மஜோதி நாமம்' இங்கு அடிக்கடி ஒலிக்கும் என்னும் நம்பிக்கையை ஊட்டுகின்றது.




ஆத்மஜோதி அவர்களின் பூதவுடல், நறுமலர்களால் தண்டிகை வடிவில் அமைக்கப்பட்ட பாடையில் வைக்கப்பட்டு, அடியவர்களால் தோளில் சுமந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. றிச்மன்ட்ஹில் இந்து ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் திரு. நா. சிவலிங்கம், இந்து சமயப் பேரவையின் போஷகர்களில் ஒருவரான கவிஞர் வி. கந்தவனம் ஆகியோர் முன்னால் செல்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




உரிமையாளர்: சபேசன்
LOW COST
**CARPET & INTERIOR**
Sales & Services
Progress Ave. Scarborough ON
**Tel: (416) 605 1990**



## , அவருக்

ரம்பப்பெற்ற சிவஸ்ரீ பஞ்சாட்சர
ல் திருநீறு பூசிப் பிறந்தநாள்
ங்கத்தினை இனிமையான த
கள், றிச்மன்ட்ஹில் ஆலய ச
ரயும் வழங்கினர். மணிவிழாக்

இடம்பெற்றது. கனடா தமிழ்
ரணி எஸ். கே. மகேந்திரன், ஏ
பார் அதிபர் அவர்களின் பல்து

வர் பங்குபற்றினர். இங்கிலா
நு பாரியரின் இரவுபகல் சபை
னியாவிலிருந்து வருகை தந்த
அதிபர் அவர்களைத் 'தலைவ

வெளியிட்டு வைத்து அதன் அ
பரின் கூரிய பார்வை' என்னும்
டு வைத்து உரை நிகழ்த்தி
மணிவிழா நாயகரிடம் வழங்க

ணிவிழா நாயகர் கௌரவிக்கப்
ளின் பிரதிநிதிகள், அன்பர்கள்
டை போர்த்து, அன்பளிப்புக
பக் கல்வி கற்பித்த திரு. நல்ல
வர்) அவர்கள் மேடையேறி









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதலாவதாண்டு நினைவஞ்சலி



**செல்வன். நிமலன் சுப்பிரமணியம்**
**(பாபு)**

தோற்றம்: 01.07.1974 — மறைவு: 16.10.1995

முதலாண்டுத் திதி:
05:10:1995

மறைந்தும் மறையாத எங்கள் அன்பு பாபுவே!
பிள்ளைக்குப் பிள்ளையாகவும்
அண்ணனுக்கு அண்ணனாகவும்
நண்பருக்கு நண்பராகவும் வாழ்ந்து
எங்கள் குலம் விளங்க உதித்த மூத்தோனே!
குடும்பத்து ஒளிவிளக்கே!
பாசத்தின் நிறைகுடமே!
எம்மை விட்டு நீர் பிரிந்து
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உமது நீங்காத நினைவு
என்றும் எம்முடனே வாழ்ந்து வளரும்!

என்றும் அன்புடன் அம்மா, அப்பா
தங்கை, தம்பி உறவினர், நண்பர்கள்

2468 Eglinton Avenue East, # 504
Toronto, Ontario M6M 5E2

## போக்குவரத்துக் கட்டணம் மேலும் உயரும்?

ஒன்ராறியோவின் பஸ் சேவைகள், மற்றும் சப்வே எனப்படும் ரயில் சேவைக் கட்டணங்களை மேலும் 20 சதத்தினால் அடுத்த ஜனவரி மாதத்தில் உயர்த்த அரசாங்கம் ஆலோசித்துள்ளது. ரொறன்ரோ போக்குவரத்துக் கமிஷன் (ரி.ரி.சி) கடந்த மாதம் முதலாம் திகதி தனது சகல சேவைகளிலும் இருபது வீதம் அதிகரிப்பினைக் கொண்டு வந்திருந்தது.

# நினைவு அஞ்ச நன்றிகளும்



**துரைராசா பாலசுரேஷ்**
**பாபு-மொன்றியல்**
(ஊரெழு, கோண்டாவில் கிழக்கு)

தோற்றம்: 14.03.1966 — இறப்பு: 11.08.1995

பச்சை வாழையொன்று குலை தள்ளாமலே
பாதியில் முறிந்து விட்டது
வசந்தத்தைக் காணாத வாலிபம் வாழ்நாளைப்
பாதியிலே முடித்துக் கொண்டு விட்டது
தென்றலைத் தீண்டாத பூவொன்று தெருவில்
விழுந்துவிட்டதாக எல்லோரும் அழுகிறார்கள்
வாழ்ந்த காலம் கொஞ்சம் என்றாலும்
எல்லோர் இதயத்திலும் அவன் வாழ்கிறான்.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்து
எமக்காக ஒளிவிளக்காய் வாழ்ந்து
வாகன விபத்தில் அகால மரணமடைந்து
வாழ்நாள் முழுக்க எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்ட
அன்புச் செல்வன் பாபுவின் இறுதிச் சடங்குகளின் போதும்
அந்தியேட்டிக் கிரியைகளின் போதும் பங்குகொண்டு
எம்துயரினைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும்
எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்பு அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர்மார்,
சித்தப்பா, சின்னம்மா
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

P.O.Box: 771, STN: Ahuntsic
Montreal, Quebec
H3L 3P3



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ...களை நாடுகடத்தும் வேலை துரிதகதியில்; இவ்வருட முதல் அரையாண்டில் 973 பேர் வெளியேற்றம்!

கனடாவுக்குள் வசித்துவரும் வெளிநாட்டுக் கிறிமினல்கள் எனப்படுவோரை நாடுகடத்துவதற்கான நிரந்தரத் திட்டமொன்றினை கனடிய குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சும் நீதி அமைச்சும் சேர்ந்து கூட்டாகத் தயாரித்துள்ளன. கடந்த ஆண்டில் குடிவரவுத் திணைக்களமும் ஆர்.சி.எம்.பி எனப்படும் விசேஷ பொலிஸ் பிரிவும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் சிறந்த பலாபலனை வழங்கியதை அடுத்தே நிரந்தரத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, பிரஜாவுரிமை அமைச்சர் சேர்ஜியோ மார்கி அறிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின்கீழ் இங்கிருக்கும் வெளிநாட்டுக் கிறிமினல்களைப் பற்றிய பட்டியலைத் தயாரிப்பது, அவர்களது நடமாட்டங்களைக் கண்காணிப்பது, கைது செய்வது, நாடு கடத்துவது போன்ற சகல விடயங்களும் ஆர்.சி.எம்.பி, பிராந்திய பொலிஸார், குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரிடம் கையளிக்கப்படும்.

"இங்கு வசிக்கும் வெளிநாட்டவர்களில் கிறிமினல்கள் எனப்படுவோர் சிறுதொகையே ஆயினும், இவர்கள் மற்றையோரின் பாதுகாப்புககுக் குந்தகமாக இருக்கின்றனர்" என்று அமைச்சர் மார்கி சுட்டிக்காட்டியுள்ளார். 'பொதுமக்களின் பாதுகாப்பையும், நாட்டின் அமைதியையும் பேணுவதற்கு நாம் அனைத்து நடவடிக்கைகளயும் தாமதமின்றிச் செய்யவேண்டியுள்ளது" என்று நீதி அமைச்சர் ஹேர்ப் கிறே தெரிவித்துள்ளார்.

"உலக நாடுகளில் அகதிகள் வெளியேற்றம் மிகவேகமாக இடம்பெறுவதால், அகதிகளுடன் அகதிகளாக கிறிமினல்களும் பிரவேசிக்கின்றனர். எல்லைப் புறங்களில் போதிய பாதுகாப்பு இல்லாததாலும், அகதிகளுக்காக எமது கதவுகள் அகலமாகத் திறக்கப்பட்டுள்ளதாலும் கிறிமினல்கள் அதனைத் தமக்குச் சாதமாக்கிக் கொள்கின்றனர்" என்று ஆர்.சி.எம்.பி இயக்குனர் கூறியுள்ளார்.

1994 ஜுலை மாதத்தில் இதற்கான தனிப்பிரிவு அமைக்கப்பட்டது. 1994 ஆகஸ்ட் 14ம் திகதி தயாரிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் கிறிமினல்கள் என்ற நிரலில் 1888 பேர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இவர்களுள் 1296 பேர் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் என்பது பின்னர் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இவர்கள் மீதான சட்ட நடவடிக்கை அவர்களது குற்றத்தை நிருபிக்கும் பட்சத்தில் இவர்களுக்குப் பத்து வருடச் சிறைத் தண்டனை விதிக்கமுடியும்.

ரொறன்ரோ, வன்கூவர், மொன்றியல், ஆகிய மூன்று இடங்களிலும் இதற்கான விசேஷ பிரிவு அமைக்கப்பட்டது. இந்தப் பிரிவுகளினால் தயாரிக்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றவர்களில் பலர் குடிவரவு அகதிகள் விசாரணைச் சபை, குடிவரவு அப்பீல் பிரிவு, நீதிமன்றம் ஆகியவைகளின் முன்னால், விசாரணையை எதிர்கொண்டிருப்பவர்களாகக் காணப்பட்டனர்.

முன்னர் அடையாளம் காணப்பட்டிருந்த 1888 பேரில் எண்பது வீதமானவர்களினதும் விசாரணைகள் இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் முற்றுப்பெற்றிருந்தது. இவர்களுள் நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்பார்த்து 268 பேரும், குடிவரவுத் திணைக்களத் தீர்ப்பினை எதிர்பார்த்து 159 பேரும், அப்பீல் தீர்ப்பினை எதிர்பார்த்து 457 பேரும், நாடு கடத்தல் உத்தரவு இடைநிறுத்தம் செய்யப்பட்டு 56 பேரும், நாடுகடத்தல் உத்தரவுக்குட்பட்ட 635 பேரும் இருப்பது தெரியவந்துள்ளது. மிகுதி 313 பேர் பற்றியும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

குறிப்பிட்ட 313 பேர் பற்றியும் விபரங்கள் சேகரிக்கப்படுவதாகவும், இவர்களைப் பற்றி ஏற்கனவே பெறப்பட்ட விபரங்கள் கனடிய பொலிஸ் தகவல் நிலையத்தின் (Canadian Police Information Centre) ஊடாக நாடு முழுவதுமுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களத்தின் தலைமைக் காரியாலயம் அறிவித்துள்ளது.

அதேசமயம், எதிர்காலங்களில் அகதி மனு நிராகரிக்கப்படுபவர்களைத் தாமதமின்றி வெளியேற்றுவதற்குச் சகல நடவடிக்கைளும் துரிதமாகச் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களான ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஜுன் முப்பதாம் திகதி வரையான ஆறு மாத காலத்துள் மொத்தம் 2408 பேர் கனடாவிலிருந்து நாடுகடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 973 பேர் கிறிமினல் பேர்வழிகள் என்று குடிவரவு, பிரஜாவுரிமை அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இது மொத்தத் தொகையில் 40 வீதமாகும். கடந்த ஆண்டில் 27 வீதமானவர்களும், அதற்கு முன்னைய ஆண்டில் 15 வீதமானவர்களும் (கிறிமினல்கள்) இவ்வாறு நாடுகடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிறிமினல்களை நாடுகடத்த உதவும் C-44 எனப்படும் புதிய சட்டம் கடந்த ஜுன் மாதம் 15ம் திகதியிலிருந்து சட்டமாகி நடைமுறைககு வந்துள்ளது. குடிவரவுச் சட்டங்களைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள், கிறிமினல் பேர்வழிகள், நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகமானவர்கள் எனப்படுவோரை நாடுகடத்த இந்தச் சட்டம் பெரிதும் உதவுகின்றது.

ஏதாவது குற்றமொன்றின் கீழ் பத்து வருடத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு சிறைத்தண்டனை பெறும் கனடாவின் நிரந்தரக் குடியுரிமை பெற்ற ஒருவர், கனடிய பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் காணப்படும் பட்சத்தில் அவரை நாட்டைவிட்டு வெளியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு அப்பீல் செய்யும் உரிமையை புதிய சட்டம் ரத்துச் செய்கின்றது. அதுமட்டுமன்றி, இவ்வாறான குற்றச் செயல்களை ஏற்கனவே புரிந்துள்ளவர்கள் எவராயினும் அவர்கள் கனடாவில் அகதிநிலை கோருவதையும் இந்தச் சட்டம் தடைசெய்கின்றது.

மேற்சொன்ன குற்றங்களுக்காகச் சிறைவாசம் அனுபவித்துவரும் ஒருவர் நாடுகடத்தல் உத்தரவுக்கு உட்பட்டவராயின் அவரை 'பரோல்' எனப்படும் மன்னிப்பு அடிப்படையில் வெளியே சென்று வசிப்பதற்கு, அல்லது வெளியே சென்று வருவதற்கு வழங்கப்படும் சலுகையும் ரத்தாகின்றது.

புதிய C-44 சட்டம் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு மேலதிக அதிகாரங்கள் பலவற்றையும் வழங்குகின்றது. இவற்றுள் முக்கியமான ஒன்று: சர்வதேசத் தபால்களில் அனுப்பப்படும் ஆளடையாள ஆவணங்கள், குடிவரவுத் தேவைக்காக அனுப்பப்படுவதாகச் சந்தேகிக்கும் பட்சத்தில் அவைகளைப் பறிமுதல் செய்யமுடியும்.

Changes to the Immigration Act became law on June 15, 1995. The amendments to the Immigration Act, called Bill C-44 address the concerns expressed by Canadians regarding abuse of the immigration system by serious criminals. The new laws provide the Immigration Department tools to ensure that the positive image of immigration is not tarnished by the few who would break Canada's laws.

Permanent residents of Canada who are convicted of crimes punishable by a maximum of ten or more years imprisonment and are considered a danger to the public will lose all right to appeal a deportation order to the Appeal Division of the Immigration & Refugee Board. All persons convicted of such crimes will also prohibited from making a refugee claim in Canada. In addition, the new measures will prevent the release of prison inmates under removal orders on day parole or temporary absence programs except into the custody of an immigration office.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேன்ஸி பூக்கடை

## தமிழ் மக்களுக்கொரு நற்செய்தி

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நித்தியகல்யாணி, வாடாமல்லி முதலிய மலர்களை வரவழைத்து சடைநாகம், பூமணவறை, மலர்ச் செண்டுகளை இலங்கை வழக்கப்படி கண்கவரும் விதத்தில் மகிழ்ச்சியுடன் செய்து தருகிறோம்.

உங்களுடைய வசதிக்கு ஏற்றபடி கல்யாணத்திற்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



| | |
|---|---|
| பெரிய மணவறை செட் | $1,200 |
| நடுத்தர பூமணவறை செட் | $1,000 |
| முத்து மணவறை செட் | $ 850 |

உங்கள் இல்லத்தில் நடைபெறும் பூப்புனித நீராட்டு விழாவிற்குத் தேவையான எல்லா பூமணவறையும் இடவசதிக்கு ஏற்றபடி அமைத்து தரமுடியும்.

**பூமணவறையுடன்:**

ஐயர் சேவையும், நிச்சயம் செய்வது (எழுத்து), பூமாலைகள், பூஜைக்குத் தேவையான சாமான்கள், சடைநாகம் +3, கொண்டைமாலைகள், 2 தலைச்சாகை, மணவறை, பூக்கள் (மேசைக்கு), 2 வாழைமரம்.

தொடர்புகளுக்கு:- **பேன்ஸி பூக்கடை & *Fancy Party Rental***

'Princess Plaza', 1668 Victoria Park Av., North York, ON.

**(416) 288-1419, (905) 770-5382**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓம்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும் கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்** (ஐயாமணி) (புங்குடுதீவு -10)

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
மற்றும்



சடைநாகம், தலை நகை செற்
முத்து மணவறை
தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூஜைப் பொருட்கள்
ஆலய வைபவங்களுக்கான
முத்துச் சப்பரம்

**ஆகியவைகளுக்கு என்றும் எப்பொழுதும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

**Tel: (416) 266-3333**

628 E, Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9

ஒன்ராறியோ வர்த்தக
சம்மேளனத்தின் சிறந்த
சேவைக்கான
விருது பெற்ற
நிறுவனம்

ஏசியன் கிறிக்கெட் கிளப்பினரின்
சிறந்த வர்த்தக
நிறுவனத்துக்கான
விருது பெற்ற
நிறுவனம்

# ஸ்ரீ சிவா ஜுவலறி

## SRISIVA JEWELLERY

721 Bloor St. W., Toronto, Ontario. M6G 1L5

**(416) 531-4867**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்